கந்தப்பையர் செய்த

# தணிகைப்பிள்ளைத்தமிழ்

மூலபாடம்.

---

ஏகபெருந்தகைப்புத்தகங்களிலாருத்தாதகைசெப்பிரதியுடனை
முரிபிட்ட வகைகள் மாறுபடுகின்றனையுறைந்து விலக்கிச்
சுத்தபாடமாக வைத்துவிலக்கும் பொருட்டு பலபாடமுட
னோக்கு பிகோர்ச்சொண்டு

சாத்தர்பாக்கம்

## கிருஷ்ணசாமி முதலியாரால்

பரிசோதிக்கப்பட்டுப்

பாலகிரி

## சோமையரவர்களது

ஆதிகலாநிதியச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

---

சாலிவாகன சகாத்தமாயிரத்தெழுநூறதெ ... .......... *
டேலு மாண்டிரு பத்தொரு முனதுன் மதியிற்.............. *
கோளுங்குணடைரா யிறதினிற பிள்ளைத்தமிழ் கொடுத்தான் *
மூல வெற்பனுக் கடியனுங் கந்தப்பமுனியே. .............. *

சென்னபட்டணம்:

பகுதான்யவருடம் ஆடிமீ

உ

# தணிகைப்பிள்ளைத்தமிழ்.

## விநாயகர்துதி.

சத்திநிபதிந்துவிளையொத்தமலபரிபாகர் தமதிதயகூடமதனிற்
றங்குவய.......நதமிநாட்டியன்பெனுந் தளையையிருகாலின்மாட்டி
மெத்தினியஞானநீராட்டிநிறைசாந்தமா மென்மலரணிந்துயிரொனும்
வியாதகவளங்கொடுத்திடமகிழ்ந்துண்டு விளையாடுகரியைநினைவாஞ்
சித்தினியல்யோகியர்நெருங்குதுகையெங்கணுஞ் செறிதிருத்தணிகைமரு
செவ்வேடனக்கருணைகிரிநாதர்நன்னயந் தேர்ந்துமகிழ்கூர்ந்துநுவலு
பத்திருடனூருயிரந்திருப்புகழமுது பருகுபன்னிருசெவியினும்
பரவுநவரசமொன்றுமறியாதசிறியனேன் பன்னுபைந்தமிழ்நுழைகவே

# காப்புப்பருவம்.

## விஷ்ணு.

நீரதந்தவுந்திமுந்திர்நிலவுலகுபுகழநின்ற நீலமலரொந்நாளினு
நீள்சுனையின்முப்போதுமலர்கின்றகல்லார நெடுவரையில்வீற்றிருந்து
பேர்தந்தபிரணவப்பொருளையிறைவன்றிருச் செஞ்செவியிலறிவுறுத்த
தேசிகனைவாசவனளித்தபொறகொடிமருவு செவ்வேளையினிதுகாக்க
கார்தந்தமேகந்தடிததிடைவிடாதுறக் கதிரவனுமோர்பாலுறக்
கலைநிறையும்வெண்மதியமோர்பாலுறக்குலவுகாட்சிநிகர்மணிவண்ண
மேர்கொண்டபொன்மார்புமிலகவொருகைத்திகிரி யேந்தியொருகையி
வெண்சங் - கேந்தியுலகிரேழுமனுதினமளித்துவண மேறியருள்செங்
ண்மாலே.

## சிவன்.

திங்களங்குழவிவிடுவெண்கதிருமரவின்மணி தேக்குசெங்கதிருமளவிச்
செம்பொனிறசெய்தபுரிவெண்பொனிற்செய்தபுரிசேர்த்துத்திரித்தகயி
கங்கைதங்குஞ்செஞ்சடாடவிக்கற்றையைக்கட்டிவைத்தெனமொய்த்திடு
கண்ணுதறசெந்திலகமொப்பமிளிரைம்முகக் கடவுளிணையடிபரவுவா
மங்கலம்பூணவயிராணிதன்கண்டத்து மாயைமருகியர்கழுத்தின்
மன்னுமுயிரகரமுதன்மருவுமங்கலமாக வளர்கடைக்கண்சிவந்து
செங்கையிலைவேறெட்டுமலையலையரக்கர்நிலை சிந்தியயிராவதத்திற்
றேவருலகைப்பவனிவந்துதென்றணிகையமர் சேயைப்புரக்கவென்றே

# காப்புப்பருவம்.

## உமையவள்.

ஆறுருவினையொழிவிலந்தகாசூரனுக் கஞ்சியழியுஞ்சுரரொலா
மயமெனவோலமிடவஞ்சலென்றவர்களொடு மன்றுமின்பக்கமருவ
நுணரவமாமிறைவர்கண்சாடைகாட்டலும் பொற்சிலைக்கைப்பிடித்துப்
பொருதழித்தந்தகனையிமையவர்தமைக்காத்த பூரணியையஞ்சலிப்பா
மாணுநுதலின்கட்டழற்பொறியதாய்க்கங்கை தங்கியிமயச்சாரல்வாழ்
சரவணப்பொய்கைதனிலாறுமகவுருவமாய்ச் சாருமறுமீன்முலைப்பா
லாணுமலர்வாயிற்பொசித்துமதுவார்ந்தொழுகுவனசமாமலரணையின்மே
வண்டுதாலாட்டவிழிதுயில்கூர்திருத்தணிகை மயிலிறைவனைக்காக்கவே

## கணபதி.

வேறு.

கோதற்றமேருவன்னேட்டிலே கொழுற்றவால்வளைக்கோட்டினு
லாதிப்பொற்பாரதந்தீட்டிய வாபச்சசாயனைப்போற்றுவாந்
தாதைப்பொற்காதினைப்பூட்டியே தாழ்ந்தித்தற்கோமொழிகாட்டினால்
வேதத்திருத்தணிகைக்குளே மேவுற்றவேலனைக்காக்கவே. (௨

## பிரமன்.

வேறு.

காய்த்தகுலைக்கதிர்வாய்க்கதிரைப்புனங் காத்தகுறப்பெணின்பாற்செலாக்
காட்டின்மிகப்பரிவாட்டுதெனக்கருள் காட்டிடெனத்தனிநோக்கியே
தேய்த்தவிடைக்கொடிமாக்கிரனைப்பிழி தேக்கிலையிற்கடிநாட்டவாய்
தேக்கிவினைத்திடர்நீக்குசெருத்தலை சேர்க்குமொருத்தனைக்காக்கவே
மாத்தவளத்துருவேய்த்தவனத்தெழின் மாற்றுபணத்துயைநாக்கிலே
மாட்டியிருக்கெனும்பாட்டையுரைத்துயிர் வாய்த்தசகத்தையுமுண்டாக்கி
னோன்
தோய்த்ததயிர்க்குடம்போய்த்திருடித்தினி சூட்டரவப்பணப்பாய்க்கணே
ஆக்கமிருத்தவன்மோட்டுதொப்புளை தோற்றுமலர்ப்பரமேட்டியே. (௩)

## கங்கை.

வேறு.

தூயோர்சகரர்க்களற்றுநோய் தோயாதுயர்நற்றுறக்கமேற்
சேராசுமரத்தனைக்கனைவி சூடார்சடலைப்பொடிக்குணீர்ப்
பாயாநன்னப்பொருத்தினேன் பாடார்தவமிக்கியற்றவான்
பாலாயரனபாற்சடைக்குள்வீழ் பாகீரதியைப்பழிச்சுவாந்
தீயார்விழியிற்பொறிக்குளோர் சேயாயுதித்துக்குளத்திலே
தேனூர்கமலப்பொகுட்டின்மேற் சேயாகிழ்வுற்றுயிர்க்கெலா
மாயாவிடனைக்கொடுத்தசூர் மாவாய்மலையத்துணித்துநீள்
வானூர்தணிகைப்பொருப்பிலே வாழ்வேல்வனைப்புரக்கவே. (௪)

## வீரபத்திரன்.

வேறு.

நேரில்தக்கன்சிரத்தினையீட்டிரு னேயவெச்சனையப்படிமாட்டிரு
னீழலக்கினியைக்கரம்வாட்டிரு னீள்குயிற்சிறையற்றிடவோட்டிருன்
மேருவிறகிறையைப்புறம்பாக்கியே வேள்வியிற்றகளைத்தி[illegible]வோர்க்கெலா
விறழித்திடர்பற்பலவாக்கிய யிரபத்திரன்மெய்ப்பதம்போற்றுவா [ம்
காருடுத்தருவட்டுறுரேக்கினைக் காமர்பச்சிலையைத்திருவாத்தியைக் [ழீ௫
காழகிற்சினையைச்சுளைவேர்ப்பலாக் காயினைத்திரையிற்பெயர்த்திர்தெ
சாரலிற்கழைமுத்தினைப்பூக்களைத் தாவில்வச்சிரதகைக்கரிக்கோட்டினைச்
சாடியிட்டருவித்திரளார்ப்பொடு தாழ்செருத்தணிவெற்பனைக்காக்கவே.

## பயிரவன்

வேறு.

விராவுமதமொடுபுராரிதனையிசழ் விரோதமொழிபலவாக்கினிற்சாற்றிடழ
விருவுபிரணவமுறுணசதுர்மறை விகாசமறுபொருடேற்றிடக்கேட்டில
கராலினறிவழிபிதாவினுயர்தலை கடாவுவிரலுகிராலறுத்தார்ப்பொடு [ன
கனுயிரவன்முதல்வினைடர்பலிகொளுங்கபாலபயிரவர்காட்டுனைப்போற
மொராருசிரமுடனிராறுபுயமுடனுகாதசிவைமயிலேறநிறுச்கேற்றிடு[று நு
முலாசனொடிவரைசெலாமுறுலகினை யுலாவிவலம்வருசீர்த்தியைப்போ
ர்சதவன [த்திகை
மராவின்மலரொடுகுராவின்மலர்நறை மருநதொடைபுனைமூர்த்திநற்கார்
வழாமலருள்குகனகலாரகிரியுறை வலாரிமருகனைவாய்ப்புறக்காக்கவே.

## இந்திரன்.

வேறு.

சூரியமதனம்புபட்டுவிரகமநிறெஞ்தினைத்தூக்கனியிதழ்மடந்தையர்க்குமோ
கமாங் - கவலையுறுதுன்பொழிதறவினையிருசமங்கிடைத்துக் கருதரிய
வினபமுத்திராடியே - கமலமலருநதியுற்றகனலையுமறிநெழுப்பிக் கடி
கொளிடையிங்கலைக்குளோடிமீள்
புரைவளியிரண்டடக்கிச்சுழிமுனையினெஞ்சிருத்திப் புருவநடுவிந்துவுர்கு
ளோமமே - புரியுமதிமண்டலத்தின்மருவுபரையின்பமுற்ற பொருளினை
யறிந்தியற்றும்யோகினூ - புணர்மலமொழிநதுவெற்பின்குகையிடைவ
திர்துநிதசம் புகழ்தணிகைமன்குகற்கோர்காவலாந்
தருமலர்புனைந்துகற்பின்சசிதனைமணந்துசொர்க்கந் தனியரசியைந்துமை
க்கணேறியே- சலமழைபொழிந்திடப்பைந்தழைபயிர்விளைந்தெவர்க்குமுந
தகையுணவுவந்தளிக்குநீர்மையான்- றவளமதகுஞ்சரத்தின்முதுகி டையி
வர்ந்தரக்கர் தலையறவெறிந்துசித்தர்பாடவே
யிருடியர்கணங்கள்சுற்றச்சுரர்தலைகரங்குவிப்ப விளமுலையர ம்பைமெச்சி
யாடவே -யிருநிதிவளங்கொழிப்பமருவலர்புறங்கொடு ப்ப விகலறநடந்
துவெற்றிகூடவே - யெழுபுவியின்மன்பதைக்குமிட ரீபுரிதரும்பொருப்பி
னிருசிறையரிந்தவச்சிரபாணியே. (௬)

## பலதேவர்.

வேறு.

வம்பவிழும்பரங்குன்றமுநந்தினை வாரலைவாயுறுசீரலைவாயினும்
வாவிதண்டலைமனுமாவினன்குடியினும் வாரகமுற்றிடுமேரகவெற்பினும்
[illegible]ம்பியகுன்றுதொறாடலினுந்திருப் பழமுதிர்சோலையினும்விளையாடிய
பாவலனைச்செழுஞ்சேவலனைச்சிவன் பாலகனைத்தணிகாசலனைத்தினம
வெம்பியசூரியர்சந்திரர்மாதவர் விண்ணவர்பண்ணமர்விஞ்சையர்கின்னர
வீறுமுருத்திரர்கூறுமருத்துவர் மேதகுமோரெழுமாதர்களாதியர்
தம்பியராயுறுமொன்பதுவீரர்க டக்கவிலக்கமெனுங்கணநாதர்க
டள்ளரும்வெள்ளமிராயிரம்பூதர்க டாவிலராய்ப்புறங்காவலராவரே.

காப்புப்பருவம்-முற்றிற்று.

# செங்கீரைப்பருவம்.

கழ்பூத்தகார்த்திகையெனுஞ்செவிலிமாதர்கண் புனலாட்டிமெய்துடை
த்துப்- புவியில்வாய்நீருமிழ்ந்தணிவிரலினூற்றேய்த்துப புதுநுதற்றிலக
மகிழ்பூத்தபூதித்திருக்காப்பணிந்துதம் மடிமேலிருத்தியெழில்சேர் [மிட்டு
மணிமுலைப்பாலூட்டிமார்பணைத்துச்சிதனை மோந்துவாய்முத்தமாடி
யகழ்பூத்தசரவணப்பொய்கையந்தொட்டின்மல ரணையிற்கிடத்தியகல
வனியினந்தாலாட்டவலைகயிறதாய்வளி யசைப்பத்துயின்றெழுந்து
திகழ்பூத்தவிளையாடல்பயில்செருத்தணிகையிறை செங்கீரையாடியருளே
சேனாடரர்ச்சனைசெய்சேனாபதிக்குரிசில் செங்கீரையாடியருளே. (க)

மேனையெனுமொருபிதாமகிதந்தபொன்சுட்டி வெண்பிறைநுதற்கணாட
மென்முலைப்பால்கறந்தூட்டியிடுகைத்தாய் மிலைச்சுபூஞ்சுடிகையாட
வானமுறுகார்த்திகைத்தாதியர்கள்செவியிலணி மகரகுண்டலமுமாட
வரநதியெனுஞ்செவிலிபுனையுமரைமணியாட வளர்சரவணப்பொய்கை
மானமுறுகோடாயணிந்தவயிரக்கடக மரைமலர்க்கையிலாட [யா
வண்மைபெறுபாண்டிமாதேவியெனுநற்றாய் வனைந்திடுசதங்கையாடத்
தேனொழுகுபைங்குவளைமலர்செருத்தணிகையிறை செங்கீரையாடியருளே
சேனாடரர்ச்சனைசெய்சேனாபதிக்குரிசில் செங்கீரையாடியருளே. (உ)

பூமியெனுநன்மாமியசுரர்புரிவேதனை பொறுக்கலாதயர்துன்பெலாம்[ன்றி
பாக்குவலெனத்திருவுரத்திருகைவைத்தல்போற் பொற்கரநிலத்திலூ
[illegible]றுந்தேவர்படுசிறையெலாங்களைய மேக்கெழுஞ்செய்கைமான
மென்[illegible]லக்கந்தரமெடுத்தெடுத்தர்தர மிசைப்பசுந்தலைநிமிர்த்துத்
தாமிறவமா[illegible]முனிவருக்கிடரிழைத்தவொரு சூர்வலிதனைக்கறுவல்போற்
சுந்தரப்பொன்முடியசைத்தசைத்துத்தண்டை சூழ்காற்சதங்கைகொஞ்
தேமருவுகல்லாரம [illegible]செருத்தணிகையிறை செங்கீரையாடியருளே [சத்
சேனாடரர்ச்சனை[illegible] சேனாபதிக்குரிசில் செங்கீரையாடியருளே. (ங)

# செங்கீரைப்பருவம்

பொன்மலைச்சாரலினூறுந்திருச்சரவணப் பொய்கையொருகட்டிலாகப்
பூந்தாமரைச்சேக்கைமலர்மெத்தையாகப் புனற்கலாமரங்கால்களாய்
மின்மலையுமீனினநெருங்கிப்பரந்தவான் வெண்மலர்ப்பந்தராக
வீறுபைந்தருமலரினிடைவிடாதொழுகுதேன் விசித்தவூசற்கயிறதாய்த்
தூன்மலைகளாமலையினொலிமுழவதாய்வளைத் தொனிமிகத்தும்பிபாடல்வாந்
தோலடிப்பறவையொலிசெஞ்சிலம்போசையிற்றோன்றமகிழ்கூர்ந்துதுய
தென்மலையமாமுனிக்கருள்செருத்தணிகையிறை செங்கீரையாடியருளே
சேணுடரர்ச்சனைசெய்சேணுபதிக்குரிசில் செங்கீரையாடியருளே. (௪)

வெள்ளிவரையிற்குடிவிழைந்தபரமன்செவியில் வீறுசங்கக்குழையினை
மென்மலர்க்கைப்பிடித்துரமேவுசிரமாலை மீதேறுசோபானமாய்த்
துள்ளிக்களித்தடிசிவப்புறமிதித்துத் துவைத்துச்சுவற்கணேறிச் [ப்
சுடர்பொற்கடுக்கைபொதிவேணியையவிழ்த்திடச் சுரநதிகுதிப்பமூழ்
பிள்ளைமதியைப்பிடித்தரவின்வாய்வைத்தவண் பிரியாதமுகிலையீர்ப்பப்
பெரிதுடனடுங்கித்தடித்தொடும்டித்துமழைபெய்யவிளையாட்டயர்தருந்
தெள்ளுபுனலூறுகற்சுனைமருவுதணிகையிறை செங்கீரையாடியருளே
சேணுடரர்ச்சனைசெய்சேணுபதிக்குரிசில் செங்கீரையாடியருளே. (௫)

வேறு.

மழைநிகர்விழியினருட்கடையாட மணிப்பட்டமுமாட
மார்பிலணிந்தமதாணியுமாட வரைத்தோளணியாடத்
தழைகனிவாயொழுகும்புனலாடச் சரிதொங்கியுமாடத்
தண்டைசதங்கைபுலம்புபதந்திகழ் தனிநூபுரமாடக்
குழையணியும்பன்னிருசெவியாடக் குஞ்சியசைந்தாடக்
கோதறுபொன்னரைநாணரையாடக் குற்றுடைவாளாட
வழிவில்பதந்தருதணிகையமர்ந்தவ னாடுகசெங்கீரை
யமரர்புகழ்ந்திடவசுரரைவென்றவ னாடுகசெங்கீரை. (௬)

நிறந்திகழ்குஞ்சிபுனைந்திடுமலரொடு நிமிர்தலையாருட
நெடுநிலமிசையெழவரையுறழ்திணிபுய நீள்கடகமுமாட
மறந்திகழவுணருரந்துளைபடவிடு வைவேல்வெயிலாட
மார்பில்வனைந்திடுநீபமுறுங்களி வண்டுதுதைந்தாடச்
சிறந்திடுசெங்கழுநீரிதழுங்குலி செறிமோதிரமாடச்
செவ்வரையிற்றிகழ்வட்டுடையாடச் சேவற்கொடியாட
வறந்திகழன்பர்தொழுந்தணிகைப்பர னாடுகசெங்கீரை
யமரர்புகழ்ந்திடவசுரரைவென்றவ னாடுகசெங்கீரை. (௭)

திருமலர்வாய்தொறுநகைநிலவாடச் செந்துவரிதழாடத்
தெரிவையர்மதர்விழியிருபுறமாடச் சிறுநுதல்வேராடக்
குருமணிமேகலைபுனைவடமாடக் குலமாமயிலாடக்
கோதறுமாதவர்பூசுரர்நெஞ்சு குழைந்துகுழைந்தாடந்
நுணயிராணிபொன்மாதெனுமாமியர் தாங்களிகூர்ந்தாடத்
யாகியதாயருமாசை தழைந்துமகிழ்ந்தாட
கமலாசனர்பணிதணிகாசல னுடுகசெங்கீரை
மரர்புகழ்ந்திடவசுரரைவென்றவ னுடுகசெங்கீரை. (அ

வேறு.

மயொடுபரசிவனுலகினைவலமுனம் வந்தாலின்றேதா
னொருகனியுதவு நமிதுபொழுதுகலுதி யொன்றேமுன்போதத்
மையனொடிகல்புரிதருபிணிமுகமிசை தங்காதங்கேறிச்
சகமுழுதையுமொருநொடியினில்வலம்வரு தநதாய்செந்தூரா
கமையறுநிசிசரரவிதரவயிலவிடு கந்தாமந்தாரக்
கடிமலர்முடிபுனைசசிமகள்வடிவகிர் கண்பாவுந்தோளா
கிமையமதுயரியதணிகையிலறுமுக செங்கோசெங்கீரை
திருமகண்மருமகனெனவருகுருபர செங்கோசெங்கீரை. (சு

கஞ்சனிகழ்ந்துநடந்திடவங்கது கண்டேவெங்கோபக்
கனல்படுமனமொடுமுலகினைமறைகொடு தந்தாயென்றுவீ
விஞ்சியசங்கிரகம்படுமந்திர முந்தோமென்பாயேல்
விரிபொருளெதுவதுபுகலுதியெனலு மயங்காநின்றுனைக்
குஞ்சியுறுந்தலைபொந்துபடும்படி கொந்தாரும்பாணிக்
குருவிரல்பொதிதரவொருமுறையறைதரு குன்றேபொன்றோய்கற்
செஞ்சிலைகொண்டவனன்றருள்சுந்தர செங்கோசெங்கீரை
திண்மலவிருடவிர்தணிகையில்வருகுக செங்கோசெங்கீரை. (க0

செங்கீரைப்பருவம்-முற்றிற்று.

ஆ பருவம் - உ இ - திருவிருத்தம் - உ0.

# தாலப்பருவம்.

பாயாவேங்கைநிழற்பிணைமேற் பாயும்வேங்கையதிர்ப்பொலியாற்
பறவாக்குளவிநிழலிருந்து பறக்குஞ்சிறையெண்காற்பறவை
காயாவத்திக்கொம்பொடித்துக் கடுகும்வயமாவினைக்கவர்ந்து
காய்க்குமத்திமிசையிறங்கக் கனிதேர்கடுவன்கறபகத்திற்
றுய்வானரம்பைக்கெதிர்நடிப்பத் தனிவானவரான்பாலூட்டுந்
தனியாவளங்கூரிரும்பூது தழைக்குந்தணிகாசலத்திலிருந்
யாயினைப்புரந்தளிக்கு மாசேதாலோதாலேலோ
ர்மயில்வாகனமேறு மழுதேதாலோதாலேலோ. (க)

# தாலப்பருவம்.

ஏலமரந்தக்கோலமகி லிலவங்கம்பச்சிலைமரந்தேக்
கெழிற்சந்தனங்குங்குமமரமு மெறிந்துகொளுவிவனசரர்க
* ளேனன்முதற்புன்பயிர்விளைத்த விசைந்தவாறுசுவையுணவுஞ்
சாலவெறுத்துவனம்புகுந்து தவஞ்செய்முனிவருகிர்சருகு
தண்ணீர்க்கிழங்காதிகளுண்ணுந் தகைமைகாட்டுமலைச்சாரற்
கோலமகழுமனையிலராக் கொழுஞ்சூட்டெரியுமணிவெயிலாற்
குளிர்பூம்பொழிலினிருணீக்கக் குறமாமகளிர்விழைந்தாடு
மாலம்பெருகுசுனைத்தணிகைக் கரசேதாலோதாலேலோ
வழகார்மயில்வாகனமேறு மழுதேதாலோதாலேலோ. (௬

வெள்ளிற்கனியாலடுப்பமைத்து வேரலுகுமுத்தரிசிதனை
வேடரரிந்துகொணர்ந்தளித்த வேழச்செவியாமுறத்தேற்றுப்
புள்ளிப்படுமான்றோற்பாய்மேற் புடைத்துக்கொழிச்சுத்தறித்தெடுத்துட
பொன்னந்துடிக்கட்டாழியுறும் புதுக்தேனொடும்பெய்துலையேற்றிச்
சுள்ளியகிற்சந்தனவிறகிற் சுடர்மாணிக்கத்தீமூட்டித்
துடுப்பாமருப்பிற்றுழாவுசிறு சோறட்டெயினப்பேதையர்கை
யள்ளிவிளையாட்டயர்தணிகைக் கரசேதாலோதாலேலோ
வழகார்மயில்வாகனமேறு மழுதேதாலோதாலேலோ. (௭

கல்லார்சுனையிற்சூரபியினங் கறந்தபாலிற்செவ்வரம்பைக்
கனிகளுழுவிவிழவதனைக் கணியின்பனைவாழ்கிளியினமும்
வில்லார்வேடப்பாவையரும் விளரியிசையாழ்விஞ்சையரும்
வெற்பிற்றவஞ்செய்முனிவரரும் வேழப்பிடியின்கரிணிகளுஞ்
செல்லார்பொழில்சேர்கோடரமுஞ் சிறக்குந்தெய்வமடந்தையருந்
தின்றுகளிப்புற்றனுதினமுந் திராவிறும்பூதுடனுறைய
மல்லார்நீலமலர்த்தணிகைக் கரசேதாலோதாலேலோ -
வழகார்மயில்வாகனமேறு மழுதேதாலோதாலேலோ. (௮

வேரன்மணியின்குழையொருபால் வேழமருப்பின்குழையொருபால்
விளங்கும்வயிரக்குழையொருபால் விழையும்வயிடூரியமொருபா
னெரிரைவமணியொருபா னீலமணியின்குழையொருபா
னிழல்சேர்பச்சைக்குழையொருபா னிறமார்கனகக்குழையொருபா
லொரும்புகழ்க்கல்லாரகிரிச் செட்டியெனப்பேர்படைத்ததனாற்
றெரிந்துவிலையாக்குறக்குவித்த சீர்மைபொருவுஞ்செருத்தணிகை
யாரலுதவும்பன்னிருகை யரசேதாலோதாலேலோ
வழகார்மயில்வாகனமேறு மழுதேதாலோதாலேலோ. (௯)

---

* நமக்ககப்பட்ட பிரதிகள் அனைத்திலும் இம்முதலடி-க்அ-சீராக விருக்கின்றது.

வேறு.

துணிபடுவெண்பிறைதவழ்முடியின்புடை சொரிமுகிலின்புனல்வார்
சுனையில்விழுந்தினுறுபுனலுங்கொடு துடர்மதமுந்தியிடாத்
திணியகில்சந்தனமரமுதிர்குங்குமந் திகழ்துடியும்பெயராச்
செறிபனசங்கணிமலர்வழைபைங்கழை சிறுமிளகுங்கொணரா
மணிவயிரங்கதிர்மரகதமஞ்சன மணியினொடும்புணரா
மருவுபொலன்கெழுமருவியிழிந்திடு வளமைதழைந்தெழில்கூர்
தணிகைநெடுங்கிரியமருநெடுந்தகை தாலோதாலேலோ
சந்தனமும்புழுகும்புனைசுந்தர தாலோதாலேலோ. (௬)

வானதியுங்குளிர்தேனடைவிண்டிழி வார்மதவுங்கரியின்
மாமதமும்புடைசூழ்சுனையின்புனன் மண்டிக்கொண்டழியா
வேனல்கருந்தினைசாமையிறுங்குறு மிதையின்மிகப்பெருகி
யிறவுளர்முன்புரிமடைகளழிந்திட வெல்லைகடந்தோடிக்
கானமருந்திதவழ்ந்துநிறைந்திரு கரைகளழித்தேகுங்
கம்பலையம்பரர்கம்பமுறும்படி காரொலியைச்சினவா
தானமெழுந்தணிகாசலவேலவ தாலோதாலேலோ
சந்தனமும்புழுகும்புனைசுந்தர தாலோதாலேலோ. (௭)

சூதக்கனியொடுபனசக்கனிபொழில் சோர்கதலிக்கனியுந்
துதைவயலிற்படுமெருவின்முளைத்தெழி றுன்னியசெந்நெலெல்லாம்
வேதக்கிழவருளத்துறுகாதல் விடக்கனகத்தினொடு
மேதினிமன்னர்விடுத்திடுதான விழுப்புனல்பூஞ்சுனைநீர்
காதற்குறவர்கள்தானத்தொடுகுடை கல்லருவிப்புதுநீர்
காலின்விழுந்தெதிர்பாயவளர்ந்தொளிர் கதிரவன்மிசையோங்குந்
தாதிற்பொலிதருகாவிக்கிரியிறை தாலோதாலேலோ
சந்தனமும்புழுகும்புனைசுந்தர தாலோதாலேலோ. (௮)

மருவலர்கற்பகமுடியணிபொற்சசி வாழ்வீறு
மகபதிவச்சிரதானுமுவப்புறு மூர்பாழாகாதே
யிருடிகள்சித்தர்களுரகரியக்கர்கள் வானாள்போகாதே
யெழுகடல்சுற்றியவடவியிடத்துறு வார்நோயாழாதே
பொருகரிபற்பல[illegible]மிடுக்குறு காலாடேரோடும்
பொருததயித்தியர்சிரமலையற்றிட வாள்கோல்வேலேவுந்
தருமலர்மொய்த்திடுபரகிரியிற்குக தாலோதாலேலோ
தணிகைமலைக்கிறையெனவருசிற்பர தாலோதாலேலோ. (௯)

நாலுமுகத்தவன்மாலையழித்திடு நாதாவாதாபி
நாசமுறச்செயுஞானமுனிக்கருள் போதாநீள்பாதா
பாலின்மொழிக்கனிவாயுமைதற்பரை பாலாமாசிலா
பாவைவெழிற்றெய்வயானையணைத்திடு மார்பாகூதாளா
கோலவனத்துறுவேடர்மகட்கிசை கோவேகூர்வேலா
கூடலரைத்தெறுகோழிமயிற்கொடி வீராதேனூர்பூச்
சாலையிருத்துளசோலைமலைக்கிறை தாலோதாலேலோ
காவில்செருத்தணிமேவியசிற்பர தாலோதாலேலோ.

தாலப்பருவம் - முற்றிற்று.

ஆ பருவம் - ௩ இ - திருவிருத்தம் - ௩0.

## சப்பாணிப்பருவம்.

இரைத்துத்திரைத்தநுரைபொங்குகடலோரமு மிணையறுகிடங்கது
விடைப்படுவரைபலெலாந்திருவுலாப்போந்துவருமேழ்பெருந்தெரு
நிரைத்துத்தழைத்தபொழிலேழுமுய்யானமா நேமிவரைநெடியமதில
நிர்ப்புறக்கடலாடுதெப்பக்குளத்தினிய னேராகமேருவரைசூழ்
வரைப்பனைத்தும்புறக்கோயிலாத்தணிகைமலை மருவுமந்தப்புரமதாய்
மன்னுயிரெலாம்புரந்தாண்டரசுபுரிகின்ற வள்ளிதெய்வானைகணவா
தரைக்குளுயர்கும்பமுனிமுடிவைத்தசெங்கைகொடு சப்பாணிகொட்டி
சரவணப்பொய்கைதனிலவதரித்திடுமுருக சப்பாணிகொட்டியருளே

மலையலையையங்கையிலடக்கியிகல்வாதாபி மலையலையையிற்றடக்கி
வண்டமிழெனும்புதியதென்கலையுடன்பழைய வடகலையைநாவடக்கி
நிலவலையமுற்றுநடுசாய்ந்துதென்றிக்கின்மே னிமிர்தலைத்தாளடக்கி
நீணிறவிடத்தினைமிடறடக்குங்கயிலை விமலனையுளத்தடக்கிக்
குலவியகருப்பநிறைமாதவனைமந்தநடைகொண்டுவளர்தென்றலெனுமே
குழவியைப்பதன்வயினடக்குமலயத்திலமர் குறுமுனிக்கருள்குரவனே
தலைமைபெறுவீட்டுநெறிகாட்டுதணிகைக்கிறைவ சப்பாணிகொட்டியரு
சரவணப்பொய்கைதனிலவதரித்திடுமுருக சப்பாணிகொட்டியருளே

பொன்மலையைவெள்ளிவெற்பாக்கியுயர்வெள்ளிப் பொருப்பைநீலச்
யதாய்ப்-புதுக்கியிந்திரநீலவெற்பைமாணிக்கப் பொருப்பாக்கிமாண
மின்மலையினைப்பவளமாக்கிமரகதவெற்பை வெள்வயிரவெற்பதாக்கி |
விண்ணுலகைமண்ணாக்கிமண்ணுலகைவிண்ணாக்கி விரிகதிரைமதியமா
னமதியினைக்கதிரதாக்கிவிண்ணவர்கடமை நானிலத்தவர்களாக்கி
நானிலத்தவர்கடமையுரகராக்கிப்புதுமை நாட்டுவிளையாட்டயர்தரு
நல்மவிடையேறுமரனருட்டணிகைவளர்குழவி சப்பாணிகொட்டியருளே
சரவணப்பொய்கைதனிலவதரித்திடுமுருக சப்பாணிகொட்டியருளே

பருந்தொடுநிழல்செலும்பான்மையெனவிஞ்சையர்கள் பரிவுடனியலி-
கள்பாடப் - பாங்கருறுவேங்கையின்பனிமலர்ச்சினைமேவு பைந்தோ-
கேட்டுறங்கு
முருந்தொடுமுத்தமுறழ்மூரற்கொடிச்சியர்கண் முருகுவாய்வைத்தரு
முருகனெதிர்சாரல்வெறியாட்டயர்தநேர்க்கிய முதைப்புனமிசைப்பட
ஞ்சூழ்
குருந்தொடுகொன்றையினை யமர்பாங்கிளிசண்மகிழ் கூர்ந்து புரவை
சைக்குரல் - குளிர்தண்சைவெற்பினிலிருந்தமாணிடவடிவு கொண்டுபு
மெய்த்தவள்ளி
தருந்தினையிளிடியிரந்தேற்றுமான்கைகொடு சப்பாணிகொட்டியருளே
சரவணப்பொய்கைதனிலவதரித்திடுமுருக சப்பாணிகொட்டியருளே.

கிம்புரிப்பூணமர்மருப்பெறுமுலக்கைகொடு செழுநிறச்சந்தவுரலிற்
கேடில்சாலிக்காய்லவங்கமொடுசெப்புறங் கேழ்தக்கோலமேலம்
வம்புறுகொடிச்சியரிடித்தவாசப்பொடிகள் வாங்கியெழில்விஞ்சைமாதர்
வளர்கதிர்க்கற்றைகால்பீதாம்பரத்தைவிலை மாற்றிடும்வள்ளிமலையிற்
கொம்புமுற்றலர்வேங்கைமரமாய்விருந்தனுஞ்சென்றவர்தமக்கொளித்த
குறமான்றனைக்குமயல்பூட்டியெழில்காட்டியணை குமரனைநிமலமூலா
தம்பமுற்றவனுதவுதணிகாசலக்கடவுள் சப்பாணிகொட்டியருளே
சரவணப்பொய்கைதனிலவதரித்திடுமுருக சப்பாணிகொட்டியருளே. (

வேறு.

உரகமுழக்கியவொலியையடக்கிடு முழைகருப்பொலியை
வுழையினுரப்பொலிதனையுமடக்கிடு முழுமுழக்கொடு
வரியினிரப்பொலிநலியவடக்கிடும் வருவைவிலப்பொலியப்
வழுவைசிலைப்பொலிமறையவடக்கிடும் வயவரிசச்சரைசல்
சரபமதிர்ப்பொலியரியின்மிடுக்கொலி தனையுமடக்கியிடுந
தருவனமொய்த்திடுசரியருவித்திகழ் தணிகைமலைக்கிறையா
குருபரசித்திரமயில்வருதற்பர கொட்டுகசப்பாணி
குறுமுனிவற்கருமறைபுகலுத்தம கொட்டுகசப்பாணி. ( )

தவளவளைத்திடுசவரர்வடிக்கணை தைத்திடுமெய்த்தேகந்
தனையுதறக்கணைசிசர்கருமுட்பட வெய்த்திடுமைக்கேழ்
லவிர்பிறையிற்பிறழ்வளையெயிற்றிட முற்கலையைப்பாய
வதுவுமருப்புகவெதிர்புலிகொட்புற முட்டியெடுத்தேகி
யிவர்சருவிற்படுமருவிதினைப்புன முற்றேறுடிக்காவி
னிழிதறவத்தொடுசெழியமலர்த்தடம் வற்றுமற்பாயும்
குவளைதழைத்திடுதணிகைமலைக்கிறை கொட்டுகசப்பாணி
குறுமுனிவற்கருமறைபுகலுத்தம கொட்டுகசப்பாணி. ( )

கந்தமொய்த்திடல்கண்டியையப்புலி குஞ்சரமெனவியவாக்
கடுகியடர்த்திடமறைகடைதிடச் சான்றிடவுளநாணி
வந்தெதிருற்றிடவெம்மலைதன்னையு மைம்முகிலெனவிகழா
மதுநுகர்மக்களினறியமுறியச்சரு மலைமுழையுட்புகுதஞ்
சந்திரன்வந்திடமுற்றுகுறந்தியர் தண்ணிழலாடியெனச்
சந்தனகுங்குமமொண்டிலகம்புனை தனியெழிலைப்பார்க்குங்
கொந்தலர்பைங்குவளைத்தணிகைக்கிறை கொட்டுகசப்பாணி
குறுமுனிவற்கருமறைபுகலுத்தம கொட்டுகசப்பாணி.

வேறு.

நிலையுலகெங்கணுமுலவியிறப்பொடு மிப்போது
நிகழ்வுவருஞ்செயலறிதருகற்றவ னட்போடும்
புரியுமகந்தனிலெழுதருசெச்சை மதத்தாலே
பொருதுகொடுஞ்சினமுடுகியணைத்து மழித்தேகல்
கருதிமறித்துசூரபயந்தொடு முற்போதக்
கருணைபுரிந்தசவலியையடக்கி யடித்தேறுந்
தருநிகர்செங்கையிலொருமுறைகொட்டுக சப்பாணி
தணிகைநெடுங்கிரிவருமிறைகொட்டுக சப்பாணி.

வேழமுகத்தயனேறுடிகலிக்கனி யைப்பேணி
மேதினிசுற்றுறுமாதிரமெட்டு நொடிப்போதிற்
றூழ்மயிற்பரியேறிமணிக்கட லிற்போகிச்
சூழினையட்டுயர்யானையர்பொற்பதி யிற்கூடி
வாழவளித்தொருவாசவன்பெற்ற மடப்பாவை
வாய்வதுவைத்தொழில்யாவுமுடித்திடு மெய்த்தேவ
தாழ்மறைக்கொடிநாயககொட்டுக சப்பாணி
தாவில்செருத்தணிவேலவகொட்டுக சப்பாணி.

சப்பாணிப்பருவம் - முற்றிற்று.

ஆ பருவம் - ௩ இ - திருவிருத்தம் - ௩0.

## முத்தப்பருவம்.

தூங்குகுதலைக்கைப்பிறைமருப்புச் சொரிமும்மதந்தாழ்கவுளூற்றாம்
சுழலுஞ்சிறுகட்புகர்முகத்துத் தும்பிகருஞ்சம்புமுதிர்
வீங்குங்கனிகள்விழுந்தழிந்து விரிசாறருவியொழுகிமய
வெற்பின்றலைத்தாலவதரித்து விளங்குந்தெய்வப்பிடிமணந்து
தீங்கிலொன்றுமுகத்தேவர் சிங்கமெனவும்பெயர்படைத்துச்
செழிக்குந்திருவாலங்காட்டிற் றேவர்வணங்கநடம்புரியு
மூங்கிலலித்தமுத்தமருண் முத்தேமுத்தந்தருகவே
மூலாத்திரியிலெழுஞான முனையேமுத்தந்தருகவே.

வழங்குமயமாமகம்புரிந்த மன்னன்புதல்வனொனுஞ்சகரர்
வானத்திறைவன்புரிந்தநெடு வஞ்சமறியார்மாநிலத்தைக்
கிழங்கினகழ்மண்ணெலாமருந்திக் கீழ்ப்போய்த்தவஞ்செய்திடுமுனிபாற்
கிளரும்பரிகண்டவற்சீறக் கிளத்துமுனிவன்றவக்கனலாற
சழங்கிமாய்ந்துநிரயமுறுந்தன்மை வினவிப்பகீரதனார்
தவமாறயுதவாண்டியற்றச் சதுமாமறையோனுலகுகன்று
முழங்கிவரும்வானதியளித்த முத்தேமுத்தந்தருகவே
மூலாத்திரியிலெழுஞான முளையேமுத்தந்தருகவே. (௨)

விதிராவமர்வெள்ளோதிமமும் விண்டுவுரஞ்சேர்பொன்னனமு
மேவுங்கொழுங்கணமலர்பூத்து விழையுமதியோராக்கருட்செந்தேன்
பொதிசெதாம்பலிதழ்விழுந்து புனைநீர்கங்கைதிருலவிப்
பொலியும்பவளவனமடர்ந்து பொனைதணமங்கலவெலாயின
கதிர்வாய்ந்தைங்கைக்களிற்றினுக்குங் கவுணியனுக்குந்திருமுலைப்பாற
கறந்துகொடுத்தேநேமியம்புட் சுருலியுயிராகனபலவளிதரு
முதிராநீலக்கடலளித்த முத்தேமுத்தந்தருகவே
மூலாத்திரியிலெழுஞான முளையேமுத்தந்தருகவே. (௩)

விளரித்தீஞ்சொலரமகளிர் விழைந்துருடையுமயிர்ச்சாந்தும்
விண்ணினறிபுகார்த்திகைமடவார் விம்மிசுரகுமுலைப்பாலுங
கிளர்மைக்கருப்கனுமைசுரந்த கிணைதொழுசுமுலைப்பாலுங்
கேடில்கூலத்தருமலரிற கின்டுமெளியாறசொரிந்தேனு
தளர்விற்சங்குமீனபோதர தாமாநாமைகுருகுண்டு
தழைப்பத்தவஞ்செய்சரவணத்தின நலணியாமிசையாயிரமிதழ்த்தேன
முளரிப்பூஞ்சேக்கையிறகுலவு முத்தேமுத்தந்தருகவே
மூலாத்திரியிலெழுஞான முளையேமுத்தந்தருகவே. (௪)

மெய்வாய்மூக்குக்கண்செவியின் வழிப்போய்விடயங்களையருந்தி
விரவும்வினையாற்சுழலபிறவி வேலைகடக்குங்கருத்துடையா
ளாவாய்வேட்கையவாவொழித்திட் டாருதாரப்படியேறி
யாறேடாறங்குலமீதி லறியுநிமலப்பெருவெளியிற்
கைவாய்மழுவுங்கறைமிடறுங் கண்ணூர்நுதலும்பிறைமுடியுங்
கவினத்தோன்றுஞ்சிவனிடத்திற் கலந்தவுமையாளுடன்பிறந்த
மொய்வானறுமீனுவந்தளித்த முத்தேமுத்தந்தருகவே
மூலாத்திரியிலெழுஞான முளையேமுத்தந்தருகவே. (௫)

வேறு.

கயிலைவெற்பும்பனிகொளிமயவெற்பும்புதிய கனகவெற்புங்குறைகடர்
 கடவுள்வெற்புஞ்சமரபுரியின்வெற்பும்பலவு கனியின்வெற்பும்புனிதமா
மயிலைவெற்புந்தழலினருணவெற்பும்பொதிய மலயவெற்புங்கலைநிலா
 மதியவெற்புங்கதிரினுதயவெற்புஞ்சுருதி மறையின்வெற்புங்கொடியுரு
நியமவெற்புஞ்சுடிகையுரகவெற்புங்களிறு நியதியர்ச்சனைபுரியவாழ்
 நெடியவெற்புந்திகிரிவடிவவெற்பும்வருவைநிகழும்வெற்பும்விடையதாஞ்
சயிலவெற்பும்பழயகுடியிருக்குங்குமர தருகமுத்தந்தருகவே
 தணிகைவெற்பின்கணமரறுமுகப்பொன்குழவி தருகமுத்தந்தருகவே.()

இருடியர்க்கும்பழயவுரகருக்குந்துயரி லிமையவர்க்குங்கிரணமா
 ரெரிகதிர்க்குங்குளிருமதியினுக்கும்புவியி லெவர்களுக்கும்வழியதாய்
வரவிடுத்தங்கவர்களறிவழித்தஞ்சியுயிர் மடியிருட்கங்குலெனவே
 மதிமயக்குங்குருகுபெயர்படைத்தண்டமுறு மலையினுட்சென்றுதுயர்கூ
ருருவுடைத்தம்பியருமுயரிலக்கம்பெயரு மொளிபெருக்குங்கணவரோ
 டெயிர்படைத்தங்கனெழுமலையொடத்தம்பிமுகனொருகணத்தஞ்சிவிழவே
தருமலர்ச்செங்கையுறுமயில்விடுக்குங்குமர தருகமுத்தந்தருகவே
 தணிகைவெற்பின்கணமரறுமுகப்பொன்குழவி தருகமுத்தந்தருகவே. ()

மழையின்முத்துந்தவளமதியின்முத்துங்கமல மலரின்முத்துங்கரியினீள்
 வளர்மருப்பின்கணொளிகிளருமுத்துங்கதலி வருகனிக்கண்பொழிநிலா
விழையுமுத்துங்குருகுதலையின் முத்துங்கமுகின் மிடையுமுத்துந்தெரிவை
 மார் - மிடறின்முத்துங்கிரிடியெயிறுமுத்துங்கிளையின் விளையுமுத்தும்
 பணையினோர்,
கழையுமுத்தும்பணிலமுதவுமுத்துஞ்செநெலின்கதிரின்முத்தும்புனலுலாங்
 கயலின்முத்துஞ்சலவர்முழுகுநத்தின்வயிறு கருவுமுத்தும்புகழதாய்த்
தழையுமுத்தும்புனையுமணியுரந்திண்குமர தருகமுத்தந்தருகவே
 தணிகைவெற்பின்கணமரறுமுகப்பொன்குழவி தருகமுத்தந்தருகவே. ()

வேறு.

திருவுஞ்சுரபியுமணியுங்கடைவிழி தத்துமருட்பார்வை
 தனைநம்புறவிருப்புறமுஞ்செறிதர மொய்த்தகடற்சேனை
மருவுஞ்சவைதனிலெவரும்பணிசெய வுற்றகொலுக்கூட
 மணியின்கணமொளிரணையின்புடையர சுற்றசசிக்கோவின்
திருவெண்கரிதருமொருபைங்கொடிபடர் வெற்றிமணித்தோளிற்
 றிகழ்சந்தனமகில்புழுகும்புனைதரு சித்ரமயிற்பாக
முருகுண்டளியினமுலவுந்தணிகையின் முத்தமளித்தருளே
 முதிருஞ்சுவையமுதொழுகுந்துவரிதழ் முத்தமளித்தருளே. (க)

ஊனதின்புறகவிபுகலென்றனுதின முற்றறிவிற்றிடவு
முயர்செந்தமிழ்ச்சிறிதறைகின்றிலனென வொட்டுகவிப்புலவ
னனமின்றெனமதுரையிலந்தணனடர் வற்கடமுற்றிடலு
மழுதன்பொடுதொழவறிசுந்தரனருள் பொற்கவியைச்சொல
யினிதன்றிறுபொருளெனவந்திறைதரு குட்டமடுத்திடுநோ
யிடருங்குகையுறுசிறையுந்தவிர்தரு நற்கவிசொற்றிடலு
முனிவன்றெதிர்வருமுருகன்றணிகையின் முத்தமளித்தருளே
முதிருஞ்சுவையமுதொழுகுந்துவரிதழ் முத்தமளித்தருளே. (௰)

முத்தப்பருவம் - முற்றிற்று.

ஆ பருவம் - ௫ இ - திருவிருத்தம் - ௫௰.

## வருகைப்பருவம்.

கண்ணனுங்கனகநிற வண்ணனுந் திருநுதற் கண்ணனு மொருங்குறைதரு
போற் - கருமலையிடத்துறச்செம்மலைவலத்துறக் கவினும்வெண்மலை
யிடையதாய்ப்
பண்ணமருநந்திநதிபுடைசூழவிடையிடைப் பைஞ்சுனைவயங்கம்செல்
பயோதரம்வயாநலிவுறக்கொடிகடாக்கல்பல்பாவையர்மரு… வருஞ்செப
துண்ணிலவுநீர்மகவுயிர்த்திடவிலாப்புறத் தொண்கரத்தால்வருடலபோ
லோங்குமுழைமேலூன்றுவெள்ளியீழென்னமழை யொழுகுநீருயிழிதரு
நண்ணிலவுகல்லாரமாலையணிமாண்புநிகர் தணிகைநாயகன்வருகவே
தடாமலப்பிணியெனையடாதுசிற்சுகமருள் சடானனக்குருவருகவே. ()

நாவலம்பெயர்புனைபொலநகடணிந்ததென நனையிதழ்மூக்கயிழந்து
நளிர்வண்டுறைதொளிர்விளக்கேற்றிவைத்ததென நறுமலர்கடுறுசண்பகக்
காவிலந்தணர்புரியுமோமவங்கியினிமிர் கரும்புகைப்படலமீபோய்க்
கடவுளர்க்காயனைவளர்த்துமுகின்மேனிபொதிகாட்சியாறசன்றுருமபி
தூவுமின்குலவுநகைவாய்நவின்றாரறிமதி தோறுமும்மாரிபொழிநீர்
துன்னுதண்பணையில்வளர்செஞ்சாலியோங்குகதிர் சூரியன்பரிகடினமே
தாவிலின்புறுகுடிகண்மேவுதண்ணடைகுலவு தணிகைநாயகன்வருகவே
தடாமலப்பிணியெனையடாதுசிற்சுகமருள் சடானனக்குருவருகவே.(௨)

ஆசினியின்முட்புறக்கனிபழுத்தொண்புவி யதிர்ந்திடவெடித்தவிடரி
னவிர்சுனைவிரிந்தநறையொழுகுமணமெண்டிக்குமளவுகால்வழியிமேடி
மூசுவண்டினமலவி மொய்த்தனிதியின்புதையன் முன்கண்டுகவரும்யதி
யோர்-முறைமைகடெரித்திடுஞ்சாரலுறுசோலைகளின் முதிர்சதிக்கொடி
யின்மிளகைக்
கூசுதருமுகமந்திதின்றழூதல்கண்டுவன கோடரந்தேனினடையைக்
கொண்டுவந்ததனுவிடைப்பிழிந்திடலுமகிழ் கூர்ந்துவிளையாடுபனைசூழ்
தாசரதியாசிரியனாகியுயர்வாழ்வுதரு தணிகைநாயகன்வருகவே
தடாமலப்பிணியெனையடாதுசிற்சுகமருள் சடானனக்குருவருகவே.(௩)

கா ...பொத்தைபைங்கதலியின்புலியடிய காய்க்குலையுந்துமீப்போய்
கமுகிளம்பாளைமடல்கீறிமுப்புடையதேங் கம்பழமுதிர்த்தெழுந்து [க்
வா...தகட்டைப்பிளந்துமழைதெறிப்புயர் மதியினுறுமானைமுட்டி
வான...சினநதாகாயகங்கையிடை வளர்சுறவின்முட்டகர்த்து
...பொத்தகண்டத்தரம்பையர்செவிக் குழைமகரமுங்கிழித்துக்
கோ...பிடிசதுப்புறங்கோத்தகிரிற் குதிக்குமிளவாளையுகளுந்
...மருவிநீராறுபாய்வயற் றணிகைநாயகன்வருகவே
...டாமலைபயிணிபெயடாதுசிற்றகமருள் சடானனக்குருவருகவே. (ச)

வா...டர்ச்... முத்தியர்சரோருக மலர்க்கலையெடுத்தருந்தி [ப்ப
மருமல...கோபபுடன்குரவையாடுமொலி மஞ்சிஞெலியைப்புடை
...ட்டரு...சடருதொழுவரைப்போர்மே ளயங்கிவர்நசேறுமுழவர்
...வெ...ருகூவினிகொளுஞ்...ம்மையலை ...லயைத்தட்பவயலி
லிட்டருங்கட்டாளமுதிர்கரும்பைசநறிக தேந்திரத்திட்டுமள்ள
ரெறிய முட்சொல்சொடுகடாவைத்தெழிப்புமொலி யிடியொலியைமாற்
...
...ட்டுசெழுக்கூட்டவணமுலவுபண்ணைசூழ் தணிகைநாயகன்வருகவே
நடாமலைபயிணிபெயடாதுசிற்றகமருள் சடானனக்குருவருகவே. (ரு)

வேறு.

கன்ன... செங்கனிவாய்க் கலசமுலைப்பொற்கடையியர்நங்
கருப்ப...ப்புறநடத்திற் கமலந்தருநமுறுக்கவிழு
நன்...நவ...யெனவறுகா ளுடிப்பெடையினொடுஞ்சுழலு
நல்...ளம்பொழிநிலவா னறும்புங்குமுதம்வாய்விரியும்
பின்...முலைமேகமெனப் பெருகுங்களிமாமயிலகவும்
பிறமும்வளைக்கைகருசமெனப் பிரியாதனங்களுவந்தேறும்
வன்...செருந்தணிகை வாழ்வேவருகவருகவே
மலையாறரவுமுமையாள்கண் மணியேவருகவருகவே. (சா)

தென்றறுகொழுந்துதவழ்பொழிலிற் செறிபூங்குழைசேர்வழைநிழலிற்
றினையின்கதிர்தின்றருவியிழி நிநதேனுண்டுவாய்குதட்டுங்
குன்றக்குகைவாய்மோட்டெருமை குடநேர்செருத்தலுகுதீம்பாற்
குட்டம்பலவுநிரப்பியிடக் குதிக்குங்கயல்களுண்டுமய
றன்றிக்கமலமிசையுறங்குந் தூநீர்மருதம்பற்பலசூழ்
சோலையுயர்விண்கற்பகப்பூஞ் சோலையெனப்பொன்மலர்களுலு
மன்றற்குவளையுலர்தணிகை வாழ்வேவருகவருகவே
மலையாறரவுமுமையாள்கண் மணியேவருகவருகவே. (எ)

பிறப்புமிறப்புமெவ்வுயிர்க்கும் பிறழாதமருந்திறம்போலப்
பெருகும்புனல்பாயவயல்கடோறும் பின்னறகதிரின்செந்நென்முகிர்ந்
தறப்பும்படைப்புமுழுதபரம் படித்துவிளைசதுநீடவு
மகலாதுழவர்செறிபணைசூழ்ந் தழகார்கன்னற்காடுறகளி
யொருக்குமதவாரணம்பிடியோ டுலவித்திரியஞ்சாரல்வளாந்
தோங்குமுங்கிற்றலையினமயி லுலவுங்கழைக்கூட்டுதிரினகவி
மறப்பிலிறுமபூதுறுந்தணிகை வாழ்வேவருகவருகவே
மலையானுதவுமுமையாள்கண் மணியேவருகவருகவே. (௮)

வேறு.

திருவர்முடிகளுருளவெயிறு தாளகிளையிற்கிராவாப
தடிகளுசிரமொருமுகவயிறு சரியமலையைப்பிளையதோ
டொருகைநெடியமிடறுகழல்க ளுடைகளிடைகடலியவே
சுழலும்விழிகள்சிதறவலகை சுவைசமுதுதரிகழப்
புகுதவயிலையெறியுமிறைவ புகரிறணிகைவளாவிலைபொரு
புனிதமுருகவரியினமருக புலவாமலர்களபொழியவே
மகுடமிளாகளசையவிசைய மயிலுமசையவருகவே
மறுகுமெமதுபிறவியகல வருகவருகவருகவே. (௯)

சரணமலர்களசையவிருது சழுவுகழலுமசையவே
சகலவுலகும்விலையிலருவை தழையுமிடையுமசையவே
யருணகிரணகடகமசைய வயிலுமசையவழிவிலா
வழகுபுயமுமசையவிருவ ரிணையுமருமமசையவே
முரணுமகரகுழைகளசைய முறுவலணியுமசையவா
முழுகுதணிகைவளாயிலலரு முருகுகுவளையணிகொடா
மருவுமுடிகளசையவிசைய மயிலுமசையவருகவே
மறுகுமெமதுபிறவியகல வருகவருகவருகவே. (க௰)

வருகைப்பருவம் - முற்றிற்று.

ஆக பருவம் - சா இ - திருவிருத்தம் - சா௰.

# அம்புலிப்பருவம்.

சாமம்.

சந்தகமுமிறைவர்விழிதோற்றிஞயிவனிறைவர் தனிநுதல்விழிபிறந்தான
ருவுமொருமானைப்புணர்ந்தாயிவன்குறவர் சருமானையுமணந்தா
னந்துகலையீரெட்டுமனனிஞயறுபத்து நாலுகலையிவனுணர்ந்தா
னுகமுடியீசர்முடியேறிஞயிவனு நாகமணிமுடியேறினா
னந்தபுலவர்க்கமுதமீந்தாயிவனுபுலவர் வந்திக்கவமுதமீவா
னாலிபமறுங்குழவியாயிஞயிவனென்றும் யாலிபக்குழவியானா
னந்தவகைதெரிந்நீதென்றணிகைவெற்பரோ டம்புலியாடவாவே
யரியானர்சிரதமுறுமழுமாமுககத்தனுடனமர்ந்தாடவாவே. (க)

### பேதம்.

மேருவினையென்றுநீவலமாகவருவையிவன் மேருதலைகீழாக்கினான்
விளம்புமுபதேசகுருவிற்பிழைத்தாயிவன் விளம்புகுருவுணரநயந்தான்
சாருவடிவழிதிநீயிவனுமழியாதவளர் சாருவடிவாயிருந்தான்
சந்ததமுநீங்காக்களங்கமுற்றாயிவன் சார்ந்திருகளங்கமில்லான்
சீருடையவத்திரிவிழித்தாதுவாகியெண் டிக்கினுஞ்சிதறினையிவன்
சிவனுதற்கட்டழற்பொறியாய்த்தருப்பையிற் சேர்ந்துமகவுருவமானான்
யாருமுணர்நிற்கதிகமாந்தணிகைவெற்பனோ டம்புலீயாடவாவே
யறிவாளர்சித்தமுறுமறுமாமுகத்தனுட னம்புலீயாடவாவே. (௨)

உரோகணியிடத்ததிகமோசமானாயிவனு மொளிராரால்பாலுவந்தா
னுயர்தலைபுவாவினிற்சலையழிந்தாயிவனு முயர்தலைபுவாவிலழியான்
சராசரவுயிர்க்குணவுநல்கினாய்ஞானியர் தமக்கழிவில்வீடளித்தான்
றனிநாளினுக்கரசனாயினாயிவனமரர் தங்களுக்கரசனானா
னிராவிலிடைவானத்தெழுந்துதிரிவாயிவ னிராப்பகலில்லாவிடத்தா [தா
னிழிவிலாச்சிறுவிதிசபித்திடப்படுவையிவ னெழில்விதியினைச்சிறைசெய்
னராவினுக்கஞ்சாமயிற்றணிகைவெற்பனோ டம்புலியாடவாவே
யறிவாளர்சித்தமுறுமறுமாமுகத்தனுட னம்புலீயாடவாவே. (௩)

### தானம்.

தக்கனிடுசாபந்தவிர்த்திடுவனைதினைக டாங்குமுடலுங்கூனியே
சாய்ந்துகிழமாகிநீசாந்துயருநீக்குவன் சகலகலையுந்தெரித்த
மிக்ககுருவில்லைப்பிழைத்தபழிதீர்க்கிடுவன் மெய்க்களங்கமுமறுப்பன்
வெங்கதிர்க்கஞ்சியொளியவியாமலருளுவன் விடவரவினச்சறுப்பன்
பக்கமிருபாலுமுனைபக்கமேபோலவளர் பான்மையுமறிந்துதவுவன்
பைங்கூழினுக்கிறைமையல்லாமலுலகுபதி னாலினுக்கிறைமைதருவ
னக்கதைதெரிந்துதணிகைக்கிறைவனோடமர்ந் தம்புலீயாடவாவே
யறிவாளர்சித்தமுறுமறுயாமுகத்தனுட னம்புலீயாடவாவே. (௪)

புறவிருளைநீக்கிடுமுனதுநெஞ்சகலாத புக்கவிருளைத்துரப்பன்
பொங்குமலைகடல்கண்டுமகிழுமுனக்கலையாத பூரணக்கடலளிப்பன்
குறைமதியமாமுனக்கருண்ஞானமோனநிலை குலவுநிறைமதியளிப்பன்
கொடியவரவுக்கஞ்சுமுன்றனக்குலகெலாங் கொடுங்கயிற்றரவாக்குவன்
மறுகமுதவுருவாகுமுன்றனக்கழியாத வாயமுதமொழியீகுவன்
வானெலாமுலவிடுமுனக்கரியசிற்ககன வானமுறுநிலையளிப்பன்
அறுதிபெறுவென்சொலைவினாய்த்தணிகைவெற்பனோ டம்புலீயாடவாவே
யறிவாளர்சித்தமுறுமறுமாமுகத்தனுட னம்புலீயாடவாவே. (௫)

வேறு - தண்டம்.

சேவூருஞ்சிவனிர்மேவுஞ்சடை சேர்வாய்நன்றிதுவானாலுந்
தேனூர்பைங்கழைபூவாரம்பிறை சீர்சால்வெண்குடையானாலுங்
காவாழிந்திரன்வானோர்துங்கமுன் கால்வாய்பொங்கமிர்தானாலுங்
கானாரும்பயிருணுகும்படி காய்வாய்தண்கதிரானாலு
நீவாவென்றிவனோதாமுன்பெதிர் நீதான்வந்திலையானாயே
னீள்காலின்றனையோவாயம்புய னோராகுந்துயரீவானான்
மாவார்பைங்கழுநீர்வாழுங்கிரி வாவாவம்புலிவாவாவே
மாதேவன்குகனோடாடும்படி வாவாவம்புலிவாவாவே. (௬)

தாயாயின்பருள்செய்வாவென்றலுந் தாழ்வாய்வந்திலைபோவாயேற
ருய்வாய்வந்தலைமோதாநின்றிருள் சார்வாய்வஞ்சகனாய்நீயுந்
தேய்வாய்வெங்கயநோயால்வெங்கதிர் சேர்போதுன்கதிர்வீவாயே
தியாரும்பணிவாயாலுண்டிடர் தீராதங்குழல்வாய்வாணிற
ஞாய்தாநின்குருமாலாமங்கனை சூதால்வநதனைசோராநீள
சோமாபெண்பழிபோமாறுங்கறை சூழாவண்வடிவாமாறு
மாயாதொண்கழுநீர்வாழுங்கிரி வாவாவம்புலிவாவாவே
மாதேவன்குகனோடாடும்படி வாவாவம்புலிவாவாவே. (௭)

வேளுருகுஞ்சுரர்மாயோனண்புறு வேதாவுந்தொழுதேயேகி
வீடார்தம்பதிசோமாவொண்கதை மேலோருஞ்சொலவோர்வாய்நீ
கூறுமுன்வருவாயேனன்றருள் கூர்வாய்வண்புகழ்சேர்வாயே
கூசாதன்பொடுநீவாவெம்பணி கோளாரும்பகைதீர்வாயே
சீறுவந்தெதிர்மாய்சூரன்செரு தீராநின்றதுமாபாவந்
தோயாநின்றதுவாழ்வீகின்றது தேனூருஞ்சுனையார்பானன்
மாருதம்புவியோர்தாழுங்கிரி வாவாவம்புலிவாவாவே
மாதேவன்குகனோடாடும்படி வாவாவம்புலிவாவாவே. (௮)

வேறு.

வானிலுறுவோரந்தணர்கள் வாடியழுதேதுன்புறலு
மாயைதருசூரன்சிரமும் வாழுமரிமாவின்சிரமுந்
தானமுடிதோயுங்கிரியுந் தாருகனும்வீழும்படிமுன்
சாடுமயிலேவுங்கரனீ டாள்கடொழுவாரம்புவியி
லூனமிலராலிங்குவரா தோடியுழல்வாய்நன்றலவே
யோதுமுனநீவந்திலையே லூனமுறுவாயங்கதனு
லானையினமாருந்தணிகை யாடவருவாயம்புலியே
யாறுமுகனோடிங் கொருநீயாடவருவாயம்புலியே. (௯)

வீடுபெறலாமன்பர்பெறு மேன்மைபெறலாஞ்செங்கதிர்முன்
விறுபெறலாமெங்குமுழல் வேலைதவிர்வாழ்வும்பெறலா
மாடுபெறலாநொந்தழியா வாய்மைபெறலாமின்பசுக
வாரிபெறலாம்வெம்பணியின் வாதையறலாமுந்தைமுயற்
கூடுமறலாம்பெண்களவிற் கூடுபழிபாவந்தெறலாங்
கூறுமறலாம்வந்திடெனக் கூறுமுனநீவந்தனையே
லாடுமயில்சூழ்தென்றணிகை யாடவருவாயம்புலியே
யாறுமுகனோடிங்கொருநீ யாடவருவாயம்புலியே. (௧௦)

அம்புலிப்பருவம் - முற்றிற்று.

ஆ பருவம் - எ இ - திருவிருத்தம் - எ௦.

## சிற்றிற்பருவம்.

அல்லிக்கமலத்தயனுவி லமருங்காயத்திரிமானு
மவனிமுழுதுமுடிசுமக்கு மனந்தனிரண்டாயிரநாவுஞ்
சொல்லற்கரியபுகழுநிலவுந தொலையாச்சூரன்றனைவென்ற
துணையில்பிரதாபக்கதிர்ச்செஞ் சுடருமுகங்கடொறுமழியாத்
தோற்றம்படைத்திரோமுலகுந் துயர்கூர்பாவவிருளகற்றுங்
கல்விக்கடலேநின்பெருமை கற்றோர்க்குதவுநற்றுணையே
காவிலரசனருள்பிடியுங் கானக்குறவர்தருபிணையுஞ்
செல்வக்கரததால்வருடடியாற சிறியேஞ்சிற்றில்சிதையேலே
சேணார்தணிகைமலைக்கிறைவா சிறியேஞ்சிற்றில்சிதையேலே. (௧)

கங்கையலைமிகுகுறப்புடைத்துங் கயத்தினலர்தாமரைமிதித்துங்
கானக்குறமான்புனத்துழன்றுங் கவினூசெச்சைவிலாவுதைத்து
மங்கையுமையாண்மடித்தலத்து மணிமேகலைக்கல்லுறத்தளர்ந்து
மையார்களர்ச்சன்றிருமாயில் வனைந்தகேழன்மருப்பலைத்துந்
திங்கடவழ்வுய்கொடுமுடிகள் செறியுமலைகடொறுநடந்துந்
தேவர்புனைமாமணிமகுடந் தேய்க்கச்சிவந்துமரம்பையர்கள்
செங்கைவருடுஞ்சிறடியாற் சிறியேஞ்சிற்றில்சிதையேலே
சேணார்தணிகைமலைக்கிறைவா சிறியேஞ்சிற்றில்சிதையேலே. (௨)

கானத்திறைவாமலைக்கிறைவா கயிலைக்கிறைவாகலைக்கிறைவா
கமலத்திறைவனசெருக்கொழித்த கருணைக்கிறைவாமகத்திறைவா
வானத்திறைவாமறைக்கிறைவா மயிலுக்கிறைவாவருடைமிசை
மன்னுமிறைவாசெங்கடப்பமாலைக்கிறைவா மதிக்கிறைவா
மோனத்திறைவாவயிற்கிறைவா மொய்ம்பார்கோழிக்கொடிக்கிறைவா
முனிவர்க்கிறைவாவேதாந்த முத்திக்கிறைவாமுடிவிலின்பத்
தேனக்கலர்பொற்சேவடியாற் சிறியேஞ்சிற்றில்சிதையேலே
சேணார்தணிகைமலைக்கிறைவா சிறியேஞ்சிற்றில்சிதையேலே. (௩)

---

* இவ்விரண்டாமடி - ௧௮ - சீருடையது.

வந்தித்திடுவோமுப்பொழுதும் வழுத்தியிருப்போநதிருப்புகழை
வலம்வந்திடுவோநின்கோயின் மலருந்தருவோம்பூசனைகட்
பந்தித்திடுவோமைம்பொறியும் பரமென்றனையேநினைந்திடுவோம்
பாலும்பழமுமுவந்தளிப்போம் பணிக்குமுனதேவலும்புரிவோஞ்
சந்திற்புழுகுங்கப்புரமுந தனிக்குங்குமமுங்கலந்தணிவோஞ
சலசத்திறையுமலையிறையுந் தண்ணந்திருப்பாற்கடலிறையுஞ்
சிந்தித்திருக்குஞ்சீறடியாற் சிறியேஞ்சிறறில்சிதையேலே
சேணார்தணிகைமலைக்கிறைவா சிறியேஞ்சிற்றில்சிதையேலே. (௪)

வம்பைப்பொடித்துமான்மதத்தால் வளருமெமதுமுலைக்கரியை
வயங்கியொளிர்பன்னிருபுயமா மணிக்கந்திறுகப்பிணித்திடுவோம்
பம்பித்தரளமுறுவனிலாப் பயிலுநினதுசெங்கனிவாய்ப
பவளக்கடிகைத்துவரிதழிற் பழிக்குஞ்சுவைத்தேன்பருகிடுவோம்
நம்பித்துணையென்றொருவனையு நாடோமுனையேநாம்புணர்வோ
நவிற்றுநினதுதேவியர்பா ணண்ணுநதுணைச்சேடியராவோஞ்
செம்பொற்கமலச்சேவடியாற சிறியேஞ்சிற்றில்சிதையேலே
சேணார்தணிகைமலைக்கிறைவா சிறியேஞ்சிறறில்சிதையேலே. (௫)

வேறு.

துயினீங்கிக்கொடுவினைநீங்கிச்சிறை துனிநீங்கிச்சுரர்களிகூரத்
துணைநீங்கிக்கொலுவணைநீங்கித் திரிதுயர்நீங்கிககரியிறைவாழ
மயினீங்கிச்சுழன்மனநீங்கிப்பழ மலநீங்கிததவர்தவமேவ
மறநீங்கித்திணிபொறைநீங்கிப்பல மதநீங்கிப்புவிமகள்வீற
வுயிர்நீங்கிப்புனையுடைநீங்கிக்கரு குடனீங்கித்தருவர்கண்மாய
வுரைநீங்கிப்புயவலிநீங்கிபபிழை யுறனீங்கித்துணைவருமேவ
வயிலேநதிக்கருமலைபோழ்ந்திட்டவ னடியேஞ்சிற்றிலையழியேலே
யருடாங்கிததணிகையிலோங்குத்தம னடியேஞ்சிறறிலையழியேலே. (௬)

தழைபாம்புக்குழைபுனைபூம்பொற்கொடி சதிராஞ்சொற்கிளிமகமாயி
சடைதாங்குத்தமிநடைதூங்கற்பிடி தனியாநதற்பரைசதுர்வேதி
கழையாம்பொற்சிலைமலராங்குற்றிடு கரம்வாய்ந்துற்றவளபிராமி
கலைதேர்ந்திட்டவண்மலையான்பெற்றவள் கூடுவார்ந்திட்டவள்கலியாணி
யெழிலாம்பற்பலவுலகீன்றிட்டவ ளினிதாஞ்சிற்சுகமுறுவாமி
யெனையாண்டற்புதவருளீந்திட்டவ ளிடமாம்வித்தகன்விடையூரு
மழலேந்திக்கொருமகனும்புத்திர வடியேஞ்சிற்றிலையழியேலே
யருடாங்கித்தணிகையிலோங்குத்தம னடியேஞ்சிற்றிலையழியேலே. (௭)

கொலையெங்கப்பழிவினையெங்கக்குடை கொடியெங்கத்தருவர்கணீடுங்
குடியெங்கக்கழலடியெங்கத்தழை குலமெங்கப்பெருவரமேவு
நிலையெங்கச்சினமொழியெங்கக்கொடு நினைவெங்கப்புயவலிதானு
நெடிதெங்கப்புனைமுடியெங்கப்படை நிறைவெங்கப்பொற்றையுறுமாயை
மலையெங்கச்சுனையிருளெங்கப்பொலி வளமெங்கத்தருவியர்தாமு
மனமெங்கப்பரியினமெங்கக்கரி மதமெங்கப்புனல்செறிவாரி
யலையெங்கப்பொருசிலைவாங்கற்புத னடியேஞ்சிற்றிலையழியேலே
யருடாங்கித்தணிகையிலோங்குத்தம னடியேஞ்சிற்றிலையழியேலே. (௮)

வேறு.

முற்றிலின்மணல்வாரி முத்தொடுமுழுநில மொய்த்திடுமெகிலார முற்படு பனிநீர்கள்
வற்புறுநிழலாடி வச்சிரமுதலான மட்டவிழ்மலர்மாலை வைத்தறையதுகோலி
நற்றவமுனிவோரு நச்செழலிளமாதர் நட்பொடுமெதிர்கூடி நற்றணிகையில்வீதித்
தெற்றியில்விளையாடுஞ் சிற்றிலையழியேலே சித்திரமயில்வீரா சிற்றிலையழியேலே. (௯)

பற்பலமணியாலும் பச்சிலைமலராலும் பத்திகொளறைவீடு பக்கமதுறுமேடை
பொற்புறுமணிமாடம் புக்கிலிதறுகூடம் புத்தமிர்தடுதூதை பொற்கலநிறைசாளீர்
வெறபுறுகுறமாதர் மெய்த்தணிகையில்வீதி விற்கறிசிறுசோறு மிக்குறவிளையாடுஞ்
சிற்பனுமுளநாணுஞ் சிற்றிலையழியேலே சித்திரமயில்வீரா சிற்றிலையழியேலே. (௧௦)

சிற்றிற்பருவம் - முற்றிற்று.

ஆக பருவம் - ௮ இ - திருவிருத்தம் - ௮0.

# சிறுபறைப்பருவம்.

கனைகடலுடுத்தபுவிமுழுவதுநொடிப்பொழுது கடிதுவலமுற்றசரணு
கமலமலரிற்குடிகொள்பிரமனையடித்துலகு கருணையினளித்தசதுரா
நனையவிழ்கடப்பமலர்குவளையொடுசெச்சைபுனை நலமலிநிகர்த்தபுயவா
நதியரவுகொக்கிறகுபிறைமதிமுடித்தசடை நயனநுதலத்தன்மகனே
வனைகழலரக்கரொடுமெயல்புரிபொருப்பினைய மடியவயில்விட்டகரனே
மழையினுடுநெற்றவளமதகரிமிசைக்குலவு மகபதிமகட்கினியனே
தினைவளர்புனத்தருவியிழிதணிகைவெற்பரச சிறுபறைமுழக்கியருளே
திமிரமலமற்றவர்கடெளியவருசிற்சொருப சிறுபறைமுழக்கியருளே. ()

கொலைபுரிதயித்தியர்களுடறலைகளற்றொழுகு குருதிகள்குடித்துநரிநாய்
குறைபடுமுடற்றுகிர்கரணமொடுசுற்றிவரு குறளிகடமைக்கருவரீண்
மலைநிகர்பிணக்குவையினூறுகுடர்புயத்தணியும் வயிரவர்களித்துமகிழா[லா
மருவுகழுமுட்படையைமுறைமுறைதிரித்துவய மகளெதிர்நடிக்கவமு
ருலையுறுகுடத்தினிடைவறைபடுதசைப்பொரிய லுருகுநிணமுற்றுமயிலா
வுறுகழுகுமைக்கொடிகள்வறுமையறவெற்றியயி லொருநொடியில்விட்
டமுருகா
சிலைமறவர்மொய்த்துவளர்தணிகைநகருக்கரச சிறுபறைமுழக்கியருளே
திமிரமலமற்றவர்கடெளியவருசிற்சொருப சிறுபறைமுழக்கியருளே.()

குறைவறுதவத்தையுறுகொடியிடையெயிற்றியர்கள் குலவுநடைகற்பவெ
னங் - குளிர்முகநிகர்ப்பவெழுசுனையிடைமுளைத்தவொரு கொடியபத
ம்வைத்துநிறைநீ
ருறுதவமியற்றனிகர் தருகமலமெத்தைமிசை யுறையுமவர்பொற்பினிழல்
போ - லுயர்தவமியற்றிமகிழ்வொடுதழல்வளர்ப்பதென வொளிர்கனல்
புடைக்கணெரியா
மறுவறுகழைத்தலையின்மயிலினநடிக்கவவர் மருவுகுதலைக்குநிகரா [ப்ச்
மறைதருகுயிற்றொகுதிமுகிலினம்வரக்கடிது மவுனமுறுபெற்றிமைகுலா
சிறுமிளகுவெற்றிலையினொளிர்தணிகைவெற்பிறைவ சிறுபறைமுழக்கியரு
ளே - திமிரமலமற்றவர்கடெளியவருசிற்சொருப சிறுபறைமுழக்கியரு
ளே. (௯)

கழையினுகுமுத்தினிலவொழுகுமொளியிற்குவளை கடியிதழவிழ்க்கவளையி
ன் - கதிர்மணியினிற்குமுதமுகைபுரிமுறுக்குவிரி சழனியலைதத்துபுனலி
னுழைசிறுகயற்புகுது மளவிலெதிர்குத்தியிடை நொசிகமுகின்மொய்பத்தரு
லைமே - னுகருமுதுகொக்கின்வலைமிடறொடிதரச்சினவி நொடிவளைகுதி
த்தெழுவரான்
மழையகடுமுட்டிமிசைவருகதிரையெட்டியுயர் மதியமுதுகுத்துவெடிபோ
ய் - மடநடையுடைக்கனகவனவளமுடைப்புவன மடுநடுவிலுற்றகமலச்
செழுமலர்மிசைத்துயிலுமுயர்தணிகைவெற்பிறைவ சிறுபறைமுழக்கியரு
ளே- திமிரமலமற்றவர்கடெளியவருசிற்சொருபசிறுபறைமுழக்கியருளே

நடமிடுமயிற்றொகுதியிசைவளர்குயிற்றொகுதிநடைபயிலனத்தொகுதிபோ
னவிலியறழைத்தினிய மழலைமொழிகற்றிளைஞர் நகுநடைபடைத்தமட
வார்
தடவரைமுடிக்கணிவர்தரவுயர்சுவர்க்கமுறு சசியினெழிலைக்கவரவான்
றலைமிசைநடக்கவெழுதகைமையைநிகர்க்குமழைதழைதருமலைச்சருவிலே
படவரமுடிக்கணொளிர்மணிவெயிலெறிப்பவிருள்படுகுகைவிளக்கமெனவே
பயனுறுகரித்திரளயலரியினத்தினொடுபகைமையறவொத்துறைதருந்
திடமுளபொருப்பர்குடியுறுதணிகைவெற்பிறைவ சிறுபறைமுழக்கியருளே
திமிரமலமற்றவர்கடெளியவருசிற்சொருப சிறுபறைமுழக்கியருளே.()

வடவரைமுகட்டிலுறுதருவனுமகத்திறையும் வனசமலருற்றவயனு
மதியமுமுடுக்குலமுமலர்கதிருமைக்கடலு மகிதலமுமற்றையவரும்
படவரவமெட்டினொடுகடகரிகளெட்டுமவை பயிறிசைகளெட்டுமிறினும்
பயனுறுதவத்தினிலையழிவரியசித்தரொடுபலமுனிவர்மொய்த்தகுகைசூழ்
மடநடையெயிற்றியர்களியலுறுமணிக்கலவமயின்முகில்வரக்கணிகண்மே
ன - மனமகிழதரக்குலவிநடமிடுசெதிக்கிசைய வனசரர்கள்கொட்டுதுடி
யார்
திடமுறுதுகிற்கொடிகளுயர்தணிகைவெற்பிறைவசிறுபறைமுழக்கியருளே
திமிரமலமறறவர்கடெள்ளியவருசிற்சொருப சிறுபறைமுழக்கியருளே. ()

வேறு.

தழைத்திடுதமனியமிழைத்திடுமணிவெயி றதைத்திடுமெழுநிலையேற்
சரித்திடுவனிதையர்முகத்தெழில்கவர்மதி தளைப்படுறுழைவழிபோய்
மழைக்குலமவர்குழல்வனப்பினைநனிகவர் மகிழ்ச்சியின்மழைபொழியும்
வருத்திடுமவரிடையெழிற்கவர்தருமினு மதத்தொடுநொடியழியுஞ்
செழித்திடுபுரிசைகண்மிசைப்படுகொடிவளி செறித்திடவசைதரலாற்
சிறப்புறவரிகதிரிளைப்புறுதுயர்தவிர் செருத்தணிமலையிறைவா
முழைச்செவிமலையுடலரக்கரையடுகுக முழக்குகசிறுபறையே
முழுத்தியமலவிருளொழித்திடுதினகர முழக்குகசிறுபறையே. (எ)

மலைச்சருவினில்வளர்தினைக்கதிரினைநுகர் வரிக்கிளிதனையிதண்மேன் [ப்
மறத்தியரணிவிரல்சுழற்றியகவணெறி மணிக்கல்வல்விசையொடுபோய்
புலந்துறுகடைசியர்களித்திடுகுரவையின் பொழிற்கமுகுறுகுலைமேற்
பொருக்கெனவிழுமுதிர்பழத்திரள்பலவிரு புறத்துதிர்தருகனியுஞ்
செலைத்தொடுகதலியின்குலைக்கனிகளுமெழி றிளைத்திடுமுழவொலாஞ்
செறித்தனுதினமுழுவயற்றலையெருவிடு செருத்தணிமலையிறைவா
முலைக்குவடசைதரமறத்தியர்நகைசெய முழக்குகசிறுபறையே
முழுத்தியமலவிருளொழித்திடுதினகர முழக்குகசிறுபறையே. (அ)

கடைப்படுபிறவியினகப்படுமிருவினை கலக்குறநிலைகுலையாக்
கறைப்படுநரகொடுதுறக்கமுமுழறரு கசட்டனையருள்விழியாற்
றடைப்படுமயலினையறுத்திகலறவொளிர் தணிக்கழனிழலிருவாச்
சலிப்பறுபரசுகவளக்கரிலெனதுயிர் தழைத்திடவிடுமுருகா
குடத்தினைநிகர்தனமறத்தியரியன்மயில் குறித்தனுதினமருவாக்
குறிச்சியிலுறுகணிமரத்தினிலமர்தரு குகைத்தணிமலையிறைவா
முடக்கியமணிவிரல்பிடித்திடுகுணில்கொடு முழக்குகசிறுபறையே
முழுத்தியமலவிருளொழித்திடுதினகர முழக்குகசிறுபறையே. (௯)

தகைத்திடுபொறிவழியுகைத்திடுபுலனொடு தடைப்படுமனநிறுவாத்
தவத்தினையனுதினமுஞற்றியமுனிவரர் தமக்கெதிர்பிணிமுகமேன்
மிகுத்திடுநறைபொழிகடப்பலரணிதரு விறற்புயமசைதரவே
விணிற்செறிபிடியொடுகுறக்கொடியிருபுறம் விருப்புறவருபவனே
திகைத்திடுநிருதர்கள்பகைத்தெதிர்விடுகணை சிதைத்தவர்நலியறவே
செகுத்திடுமிலையயில்பிடித்திடுமறுமுக செருத்தணிமலையிறைவா
முகிழ்த்திடுமணிவிரல்பிடித்திடுகுணில்கொடு முழக்குகசிறுபறையே
முழுத்தியமலவிருளொழித்திடுதினகர முழக்குகசிறுபறையே. (௧0)

சிறுபறைப்பருவம் - முற்றிற்று.

ஆ_ பருவம் - ௯ இ - திருவிருத்தம் - ௯0.

# சிறுதேர்ப்பருவம்

அறுபதமிதிப்பமுகைவிண்டுதண்ணென்றுளி யசும்புசலசப்பொகுட்டி
னாசிளவனஞ்சங்குவயிறுளைந்தீன்றமணியவிர்பெடையுயிர்த்தசலமென்
றுறுசிறையகத்தணைத்தடைகிடந்திடுவய லுடுத்தகனைறகாடுவா [விடச்
ஞெங்குகமுகைத்தீண்டவளர்சமுகுசெங்கின்மூப் புடையகளிமைத்தா
செறியிலைமூடத்தாழையிரவியிரதநதொடச செழித்ததண்ணடைசள்புடை
சூழ் - திருநந்தியாறுபுனல்பெருகுகாலூர்தொறுந திகழ்திருத்தணிகை
நாடா
சிறைதவிரவமரருறுகுறைதவிர்த்தருள்குமர சிறுதேருருட்டியருளே
சிவஞானசித்திதரவருஞானசத்திதர சிறுதேருருட்டியருளே. (௧)

கவான்மலையில்விளையாடுவனசரர்சிறூர்விளாங் கனியுதிரவேயெறிந்த
கரிமருப்பயல்சூழுமருதமுறுதண்பலாக் கனியினைச்சாடியுழவர்
குவாலுறப்புரியுநெற்போர்மீதுவளையின்றூர் குழவிமதியொப்பவீழுங் [வே
கொண்டலுருவக்களமர்தருமகார்வாளைக்கு கொக்கின்முதிர்கனியுதிர
தவாதெடுத்தெறிசங்குவெள்ளிலங்கனிகளைச் சாடிவனசரர்குடிசைமேற்
றவழுமுழுநிலவெனத்திகழுமதிசயமருவு தணிகையங்கிரிமுருகனே
திவாகரனிவர்ந்துவருதேர்நாணவொளிர்மணிச் சிறுதேருருட்டியருளே
சிவஞானசித்திதரவருஞானசத்திதர சிறுதேருருட்டியருளே. (௨)

கொங்கார்மலர்த்தடத்தரவிந்தமெத்தையிற் குடிகொண்டவாழ்க்கையொ
ருவிக்-குடவயிறளைந்தலறிவாய்விட்டரற்றநீர்க் கோடேறிவயலினூர்ந்து
முந்தூர்ப்புனற்காலினூடித்தவழ்ந்துழவர் முன்றிலிற்சென்றுமேதி
முதுகிற்றவழ்ந்தேறியசலநிகர்நெற்போரின் முடியிற்றவழ்ந்திறங்கிச்
சந்தூருமலையருவிநீரிலெதிரேறித் தடஞ்சுனையெலாமுழக்கித் [வா
தவருறுமுழைக்குட்டவழ்ந்துமுத்தீனறுவளை தங்குதென்றணிகையிறை
சென்றூரிருந்தவுணர்நந்தூரழித்தகுக சிறுதேருருட்டியருளே
சிவஞானசித்திதரவருஞானசத்திதர சிறுதேருருட்டியருளே. (௩)

சகத்திரத்தோடுவிரிகஞ்சப்பொகுட்டினுறை சதுமுகவிரிஞ்சனெழுதுந்
தலைப்பொறியனைத்தையுமுணர்ந்தசித்திரகுத்தர் சாற்றியகணக்கைவினவி
மிகப்பருத்தோங்கிவளையுங்கருங்கோட்டுமுழை மேவுபிலவாயசெங்கண்
மேதிக்கடாவைக்கடாவிமுச்சிகைமருவு வெள்வேறிரித்துமுகிலின்
வகைப்படுமிருட்டுருவமசனியுளைவாய்ந்துபிறை வாளெயிறிலங்குசண்டன்
வாராமுனென்றனைக்காத்தருடிருத்தணிகை மாமலையில்வாழுமுருகா
செகத்திலுயிர்யாவையுமளித்தவம்பிகைமதலை சிறுதேருருட்டியருளே
சிவஞானசித்திரவருஞானசத்திர சிறுதேருருட்டியருளே. (௪)

தாருகன்றேரினையுருட்டியரிமாமுகன் றனதுபேய்த்தேருருட்டித்
தாவிலாச்சூரனிந்திரஞாலவிரதமுந் தகர்ந்திடவுதைத்துருட்டி
வீரரொன்பதின்மர்தேரொடுபடைத்தலைவர்தேர் வெவ்வேறுபுடைசூழ்தர
மேதினியெனும்பரமனேறுதேரெங்கும் விரிந்திடுமிரண்டாயிரம்
பேரெனுந்தொகைமருவு பூதவெள்ளத்துடு பிறழ்மணித்தேரிலேறிப்
பெயர்த்தலையெறிந்திடுகடற்றலைநிசாசரர்பிணக்குவைபடத்தொலைத்துத்
தீரவரிதாஞ்சினந்தவிர்செருத்தணிகையிறை சிறுதேருருட்டியருளே
சிவஞானசித்திரவருஞானசத்திர சிறுதேருருட்டியருளே. (௫)

மங்குலைத்தீண்டுகொடிமணிமாடமுடிதவழு மதியிளம்பிள்ளைமடவார்
மடிமீதுசிறுகுழவியெனவுவந்தேறலு மகிழ்ந்துமணிமுறுவல்பூத்துப்
பங்கயமலர்க்கரத்தேந்திமுத்தாடிவாய் பஞ்சணையின்மீதுசேர்த்திப்
பாலொடுபழங்கனிந்துதவிமுகமன்சொற் பரிந்துவிளையாடிவரவென்
றங்கணகலும்படிவிடுத்திடுவிருப்பினு லனுதினங்கலைகள்வளரு
மழகியசெருத்தணிகைவரைநினைந்தவர்வினை யறுத்தருளுமாறுமுகவா
செங்கதிர்த்தேர்நாணவம்புலித்தேர்மீது சிறுதேருருட்டியருளே
சிவஞானசித்திரவருஞானசத்திர சிறுதேருருட்டியருளே. (௬)

பேய்த்தேரைநீரெனக்கொண்டுழலுமிரலையிற் பிணித்திடுகயிற்றிலரவப்
பிராந்தியுறுமொருவனிற்சுத்திநிகழிரசிதப் பித்தடைந்திடுபேதையிற்
பூத்தேரினுறுவாழ்வுமெய்யென்றுகருதியான் பொறிவழிச்சென்றுபஞ்ச
புலனையுமருந்தியானெனதெனுமகந்தையாற் புன்பிறவியணுகுமலநோய்
தீர்த்தேர்பெறுந்திருவடித்தாமரைப்போதி னீழறந்தானந்தமா
நித்தபரிபூரணசிதாகாசவெளியிலே நிலைபெறவிடுத்தமுருகா [ளே
தேய்த்தேமுடிக்கண்மதிதவழ்தணிகைவெற்பின்மேற் சிறுதேருருட்டியரு
சிவஞானசித்திரவருஞானசத்திர சிறுதேருருட்டியருளே. (௭)

காமக்குரோதமிகுலோபமொடுமோகமுங் கருதுமதமாச்சரியமும்
கட்டிப்பிணித்துநிரயத்திலிடுமைம்புலக் காதலுமறத்துறந்து
தாழ்ந்திடுந்துறவறத்தினிலேவருந் தவழகானகத்தடைந்து
சருகருந்திப்பஞ்சசமூலிடையிருந்தூழ் தவம்புரிந்திடுமாதவர்
தோமற்றசிந்தனைக்கெட்டாதநின் திருத்தாண்மலர்ப்பாதமிழந்து [ரா
றுயரறவிருத்தியெனையாண்டருள் செருத்தணிச் சுடர்மணிகிரியமர்ந்தரு
செமித்தமறைநெறிகளெங்கணுமவிளங்கிடச் சிறுதேருருட்டியருளே
சிவஞானசித்திதரவருஞானசத்குரு சிறுதேருருட்டியருளே. (௮)

வேறு.

மனத்தொடுமொழியுடலொருப்படுமெய்யர் வணங்கொம்மெடிமேவண
மலத்தொடுமிருவினையகப்படுமுயிர்கள் வசப்படுதிறநாடிச்
சினத்தொடுமயல்விழையவிர்தரும்பொறிபுலன் சிதைத்தறிவினிமேலாவா
சிவத்தினையடைதரவவத்தைகள் கழிவுறு செயற்கையைமெளிதியந்
தனித்தொருமயின்மிசையிருந்தியகழலொடு தவத்தினர்புடைசூழச்
சலிப்பறவெதிர்வருமருத்திகொளமுருக தலத்துயர்குருநாதா
வுனக்குறுவலவனுமனத்ததிசயமுற வுருட்டுகசிறுதேரே
யுலப்பறுவளமலிசெருத்தணிமலைபவ னுருட்டுகசிறுதேரே. (௯)

தனைத்துணைமுனிவர்களுளரோதிடுமருதிக டமைத்தபன் மிருகாதிர
தமிழ்க்கடலுறுமிதிநினைத்துணைடநியமலி சலிப்பறும்பிறையாலே
யிரித்திடுபுகழ்பெறுமினோர்தமிழொருத மிருத்துமுனிமேயுறும
வெளிற்றுருவுறுகரிமிசைக்குலவியகழல் வெறிக்சறுமாலாமே
லுருப்பொலியிமையவரளித்திடுமமுதொடு குறாதிடர்த்திமாவுப்
குளிர்ப்புறுசார்தருகனிடபொடுமகிழ்பெறு குலப்புதுமலாமோ
வொருத்தருநிகரறுசெருத்தொழிலவலரு வுருட்டுகசிறுதேரே
யுலப்பறுவளமலிசெருத்தணிமலைபவ னுருட்டுகசிறுதேரே (௰)

சிறுதேர்ப்பருவம் - முற்றிற்று.

ஆகப்பருவம் - ௰ - திருவிருத்தம் - ௱

தணிகைப்பிள்ளைத்தமிழ்

முற்றிற்று.

# ஸ்ரீ ஸுப்ரஹ்மண்ய

## அஷ்டோத்தரசதம்.

ஆரியத்தமிழ்

# எழுத்துப்படம்.

| உயிரெழுத்து. | | | மெய்யெழுத்து. | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| கிரந்தம் | ஆரியத் தமிழ் | தெலுங்கு | கிரந்தம் | ஆரியத் தமிழ் | தெலுங்கு | கிரந்தம் | ஆரியத் தமிழ் | தெலுங்கு |
| 𑌅 | அ | అ | 𑌕 | க | క | 𑌨 | ந | న |
| 𑌆 | ஆ | ఆ | 𑌖 | 2க | ఖ | 𑌪 | ப | ప |
| 𑌇 | இ | ఇ | 𑌗 | 3க | గ | 𑌫 | 2ப | ఫ |
| 𑌈 | ஈ | ఈ | 𑌘 | 4க | ఘ | 𑌬 | 3ப | బ |
| 𑌉 | உ | ఉ | 𑌙 | ங | ఙ | 𑌭 | 4ப | భ |
| 𑌊 | ஊ | ఊ | 𑌚 | ச | చ | 𑌮 | ம | మ |
| 𑌋 | 𑌋 | ఋ | 𑌛 | 2ச | ఛ | 𑌯 | ய | య |
| 𑍠 | 𑍠 | ౠ | 𑌜 | 3ச | జ | 𑌰 | ர | ర |
| 𑌌 | 𑌌 | ఌ | 𑌝 | 4ச | ఝ | 𑌲 | ல | ల |
| 𑍡 | 𑍡 | ౡ | 𑌞 | ஞ | ఞ | 𑌵 | வ | వ |
| — | எ | ఎ | 𑌟 | ட | ట | — | ழ | — |
| 𑌏 | ஏ | ఏ | 𑌠 | 2ட | ఠ | 𑌶 | ஶ | శ |
| 𑌐 | ஐ | ఐ | 𑌡 | 3ட | డ | 𑌷 | ஷ | ష |
| — | ஒ | ఒ | 𑌢 | 4ட | ఢ | 𑌸 | ஸ | స |
| 𑌓 | ஓ | ఓ | 𑌣 | ண | ణ | 𑌹 | ஹ | హ |
| 𑌔 | ஔ | ఔ | 𑌤 | த | త | 𑌳 | ள | ళ |
| 𑌂 | — | ం | 𑌥 | 2த | థ | — | ற | ఱ |
| 𑌃 | — | ః | 𑌦 | 3த | ద | — | ன | — |
| — | ஃ | — | 𑌧 | 4த | ధ | 𑌕𑍍𑌷 | க்ஷ | క్ష |

# பூஜாவிதிக்ரமம்.

த்யாயாமி
ஆவாஹயாமி
ஆஸனம்ஸமர்ப்பயாமி
அர்க்யம்ஸமர்ப்பயாமி
பாத்யம்ஸமர்ப்பயாமி
ஆசமநீயம்ஸமர்ப்பயாமி [யாமி
பஞ்சாம்ருதஸ்நானம்ஸமர்ப்ப
வஸ்த்ரம்தாரயாமி
விபூதிம்தாரயாமி
கந்தாந்தாரயாமி
யஜ்ஞோபவீதம்தாரயாமி
அக்ஷதாந்தாரயாமி
புஷ்பாணிம்பூஜயாமி
தூபமாக்ராபயாமி
தீபம்தர்ஶயாமி
நைவேத்யம்நிவேதயாமி
தாம்பூலம்நிவேதயாமி
கர்ப்பூரநீராஜநம்தர்ஶயாமி
ஸுவர்ணபுஷ்பம்ஸமர்ப்பயாமி
மந்த்ரபுஷ்பம்ஸமர்ப்பயாமி

## ஸ்ரீஸுப்ரஹ்மண்ய அஷ்டோத்தரஶத நாமாவளி.

### ப்ராரம்பஃ.

ஓம்ஸ்கந்தாயநமஃ.
குஹாயநமஃ.
ஷண்முகாயநமஃ.
பாலநேத்ரஸுதாயநமஃ.
ப்ரபவேநமஃ.
பிங்களாயநமஃ.
க்ருத்திகாஸூநவேநமஃ
ஶிகிவாஹநாயநமஃ.
த்விஷட்புஜாயநமஃ.
த்விஷண்ணேத்ராயநமஃ. க0
ஶக்திதராயநமஃ.
பிஶிதாஸப்ரபஞ்சநாயநமஃ.
தாரகாஸுரஸம்ஹாரிணேநமஃ.
ரக்ஷோபலவிமர்தநாயநமஃ.
மத்தாயநமஃ.
ப்ரமத்தாயநமஃ.
உந்மத்தாயநமஃ
ஸுரஸைந்யஸுரக்ஷகாயநமஃ
தேவஸேநாபதயேநமஃ
ப்ராஜ்ஞாயநமஃ உ0
க்ருபாளவேநமஃ
பக்தவத்ஸலாயநமஃ
உமாஸுதாயநமஃ.
ஶக்திதராயநமஃ.
குமாராயநமஃ.
க்ரௌஞ்சதாரணாயநமஃ.
ஸேநாந்யைநமஃ.
அக்நிஜந்மநேநமஃ.
விஶாகாயநமஃ.
ஶங்கராத்மஜாயநமஃ. ௩0
ஶிவஸ்வாமிநேநமஃ.
கணஸ்வாமிநேநமஃ.
ஸர்வஸ்வாமிநேநமஃ.
ஸநாதநாயநமஃ.
அநந்தஶக்தயேநமஃ.
அக்ஷோப்யாயநமஃ.
பார்வதீப்ரியநந்தநாயநமஃ.
கங்காஸுதாயநமஃ.
ஶரோத்பூதாயநமஃ.
பாவகாத்மஜாயநமஃ. ௪0

ஐச்ஜம்பாயநம:.
ப்ரச்ஜம்பாயநம:.
விச்ஜம்பாயநம:.
கமலாஸநஸம்ஸ்துதாயநம:.
அக்நிகர்பாயநம:.
ஸமீகர்பாயநம:.
விஶ்வரேதஸேநம:.
ஸுராரிக்நேநம:.
ஏகவர்ணாயநம:.
த்விவர்ணாயநம:. ௫0
த்ரிவர்ணாயநம:.
ஸுமநோஹராயநம:.
சதுர்வர்ணாயநம:.
பஞ்சவர்ணாயநம:.
ப்ரஜாபதயேநம:.
ஹிரண்யவர்ணாயநம:.
ஸுபகராயநம:.
வடுவேஷதராயநம:.
வடவேநம:.
பூஷ்ணேநம:. ௬0
கபஸ்திநேநம:.
கஹநாயநம:.
சந்த்ரவர்ணாயநம:.
லாதராயநம:.
மாயாதராயநம:.
மஹாமாயிநேநம:.
கைவல்யதாகாரணாயநம:.
விஶ்வயோநயேநம:.
அநேகாத்மநேநம:.
தேசாஸிதயேநம:. ௭0
அநாமயாயநம:.
பரமேஷ்டிநேநம:.
பரப்ரஹ்மணேநம:.
வதகர்பாயநம:.

விராட்வஸுவேநம:.
புளிந்தகந்யாபர்த்ரேநம:.
மஹாஸாரஸ்வதப்ரியாயநம:.
ஆஶ்ரிதாகிலதாத்ரேநம:.
சோரக்நாயநம:.
ரோகநாஶநாயநம:.
அநந்தமூர்த்தயேநம:
ஆநந்தாயநம:.
ஶிகண்டிக்ருதகேதநாயநம:.
டம்பாயநம:.
பரமடம்பாயநம:.
மஹாடம்பாயநம:.
வ்ருஷாங்கபதயேநம:.
காரணோபாத்ததேஹாயநம
காரணாதீதவிக்ரஹாயநம:.
அநீஶ்வராயநம:. ௯0
அம்ருதப்ராணாயநம:.
ப்ராணாயாமபராயணாயநம:.
விரஹந்த்ராயநம:.
வீரக்நாயநம:.
ரக்தாயநம:.
ஶ்யாமளாயநம:.
பிங்களவர்ணாயநம:.
பஹுவர்ணாயநம:.
சேகாபதயேநம:.
தாக்ஷிண்யவரப்ரதாயநம:. ௧00
ஸர்வேஶ்வராயநம:.
லோககுரவேநம:
அஸுராநீகமர்தநாயநம:.
கிரீஶாயநம:.
ஸுப்ரஹ்மண்யாயநம:
ப்ராஹ்மணப்ரியாயநம:
ஶரவணோத்பூதாயநம:.
ஸ்ரீஸுப்ரஹ்மண்யாயநம:. ௧0௮